

'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.


# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 12 சோபகிருது வருடம், ஆனி மாதம் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை (07.07.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 18, 0115 886187 - பக்கங்கள் 12 விலை ரூ.50


## வங்கிகளின் வட்டி வீதங்கள் குறைப்பு

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதத்தை 11 சதவீதத்தால் குறைக்கவும் நிலையான கடன் வசதி வீதத்தை 12 சதவீதத்தால் குறைக்கவும் நேற்று முன்தினம் (05) இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கியின் நாணயசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் மத்திய வங்கி வெளியிட்டுள்ள... 02 பக்கம்

## ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் நேற்று (06) வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

அதற்கமைய, சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான குழுக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பான இரண்டாம் நாள் விவாதம் நேற்று (06) பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. விவாதத்தின் பின்னர், இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான தீர்மானத்தை ஒத்திவைப்பதாக சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்தார். மேலும், 19ஆம் திகதி அந்தத் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாக்கெடுப்பை நடத்துவதாகவும் அவர் அறிவித்தார்.

அதனை தொடர்ந்து கருத்து தெரிவித்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடா, இந்த சட்டத்தை இன்று(நேற்று) நிறைவேற்றிவிட்டு பின்னர் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு கூறினார். 02 பக்கம்

# முல்லைத்தீவில் மனிதப் புதைகுழி!

## பல மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டன



விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் பகுதியில் கடந்தவாரம் விடுதலைப் புலிகளின் உடல்களாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற விதமாக கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்கள் தொடர்பிலான மேலதிக அகழ்வுப் பணிகள் நேற்று வியாழக்கிழமை(06) இடம்பெற்ற நிலையில், மேலும் பல எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்நிலையில், மாலை 03.30 மணியளவில் அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டதுடன், குறித்த மனிதப் புதைகுழி... 02 பக்கம்

## லாஃப்ஸ் எரிவாயு விலை குறைப்பு




புதிய விலை திருத்தத்துக்கு அமைய நேற்று (06) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. » 02 பக்கம்




## சீமெந்து விலை 300 ரூபாவால் குறையும்

02பக்கம்

## நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய பாராளுமன்ற விசேட குழு நியமனம்

### சாகர நியமனத்துக்கு சபையில் கடும் விமர்சனம்

அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கும் அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் கடமையாற்றுவதற்காக சட்டத்தரணி சாகர காரியவசம் தலைமையில் பின்வரும் உறுப்பினர்கள் பெயர் குறித்து... 02 பக்கம்

## ஊழல் எதிர்ப்புச் சட்டம் முன்னதாகவே கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு



ஊழலுக்கு எதிரான சட்டம் போராட்டத்துக்குப் பிறகு கொண்டு வருவதானது நமது நாட்டில் சாதகமானதொரு நிகழ்வாக இருந்தாலும், இது முன்னரே நடந்திருக்க வேண்டும் எனவும் அரசாங்கமானது... 02 பக்கம்

## முஸ்லிம் எம்.பிக்கள் முன்வைத்த ஆவணத்தை கருத்திற்கொள்க!



### முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் தொடர்பில் நீதி அமைச்சரிடம் ரிஷாட் எம்.பி. கோரிக்கை

நா.தினுஷா

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் தொடர்பில், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பூரண பங்களிப்புடனும் ஆலோசனையுடனும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்... 02 பக்கம்

கமெண்ட் கந்தர்...



அமெரிக்கத் தூதுவர் செல்பி எடுக்க இந்திய தூதுவர் போஸ் கொடுக்க.. எல்லாம் ஜாலியாத்தான் போகுது என்னங்கோ...



வெளிநாட்டுத் தூதுவர்களுக்கென அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'எல்ல ஓடிசி' விசேட நட்புறவு சுற்றுப்பயணத்தின்போது அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுடன் செல்பி எடுத்துக்கொண்டார்.



உஷ்

ரொஷான் ரணசிங்க, ஹரீன் பெர்னாண்டோ, திலும் அமுனுகம ஆகிய அமைச்சர்கள் மிகவும் மனக்கவலையுடன் இருக்கிறார்களாம்.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வரும் பல தலையீடுகளால் அவர்கள் இவ்வாறு விரக்தியில் உள்ளதாக தகவல்.

அதேபோல செயலாளர்கள் நியமிக்கப் படாததால் இராஜாங்க அமைச்சர்கள் புலம்புகின்றனராம். உத்தியோகபூர்வ வேலைகளுக்கு செல்வதாயின் கூட அமைச்சின் செயலாளர்மேல் தங்கியிருக்க வேண்டியுள்ளதால் இராஜாங்க அமைச்சுப் பொறுப்பை இராஜினாமா செய்துவிடலாமென்றும் நினைக்கின்றனராம் சில இராஜாங்க அமைச்சர்மார்.

## கண் அறுவை சிகிச்சையின்போது இளம் தாயொருவர் உயிரிழப்பு

### மயக்க மருந்தே காரணமென வைத்தியர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, தேசிய கண் வைத்தியசாலையில் பெண்ணொருவருக்கு மேற்கொள்ளப்பட்ட கண் அறுவை சிகிச்சையை தொடர்ந்து, அவர் நேற்று முன்தினம் (05) உயிரிழந்துள்ளார். 02 பக்கம்

## இலங்கை - தமிழக மலையக தமிழர் தோழமை இயக்கம் தமிழகத்தில் உதயம்

### கௌரவ தலைவராக த.மு.கூ தலைவர் மனோ கணேசன்

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பியை கௌரவ தலைவராக கொண்டு தமிழ்நாட்டில் இலங்கை - தமிழக மலையக தமிழர் தோழமை இயக்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. » 02 பக்கம்



## தேயிலைக்கு செஸ் வரி அதிகரிப்பு

நா.தினுஷா

ஒவ்வொரு நூறு கிலோ கிராம் தேயிலைக்கான செஸ் வரி 400 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரி அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த மாதம் 21ஆம் திகதி பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரணவினால் வெளியிடப்பட்டுள்ளது.

தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கை தேயிலைச் சபை சட்டத்தின் 13(01)(அ) என்ற உறுப்புரைக்கமைய விதிக்கப்பட்டுள்ள செஸ் வரியாக ஒவ்வொரு நூறு கிலோ கிராமுக்கும் 300 ரூபா அறவிடப்படும் என்ற ஏற்பாடு, ஒவ்வொரு நூறு கிலோ கிராமுக்கும் 400 ரூபா செஸ் வரி அறவிடப்படும் என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட தங்கம் கோட்டாவின் வங்கிக் கணக்கில்

### பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டிய சிறீதரன் எம்.பி.



தமிழீழ வைப்பகத்திலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட தங்கம், பணம் ஆகியன ராஜபக்ஷக்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன. உலகத்தின் எந்த நாட்டிலும் நடக்காத விதத்தில் இலங்கை மத்திய வங்கியில் பெருந்தொகை பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் செய்தவர்கள் இன்று உயர் பதவிகளில் உள்ளனர். சுதந்திரமாக நடமாடுகிறார்கள். இவர்கள் மீது நடவடிக்கையெடுக்க முடியாத நிலையில், எதற்காக ஊழல் ஒழிப்புச் சட்டம், அதற்கு ஒரு விவாதம். இப்படியாக பாராளுமன்றம் காலத்தை இழுத்தடிக்கும் வேலைகளையே செய்கிறது என்பதை... 02 பக்கம்

## இந்திய சமையற்கலை நிபுணர் கொழும்பில் கொலை

கொழும்பு கோட்டை, காலி முகத்திடலில் அமைந்துள்ள உணவகம் ஒன்றின் இந்தியாவை சேர்ந்த முகாமையாளர் ஒருவர் இந்திய பிரஜையான தலைமை சமையற்கலை நிபுணரை கொலை செய்துள்ளதாக கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் (05) இரவு இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இருவருக்குமிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து, முகாமையாளர் கத்தியால் குத்தியதில் சமையற்கலை நிபுணர் உயிரிழந்தார்.

அஜய் குமார் என்ற 29 வயதுடைய... 02 பக்கம்

## முஸ்லிம் எம்.பிக்கள்...

அடங்கிய ஆவணத்தை கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வேண்டுகோள் விடுத்தார்.

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் நேற்று (06) பாராளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சுதந்திரத்துக்குப் பின்னர் இந்த நாடு நாசமடைவதற்கு அரசியல்வாதிகளும் குறிப்பாக, ஆட்சிக் கதிரையில் அமர்வதற்காக மக்களை தமது தேவைக்கேற்ப உசுப்பேத்தி, இனவாதத்தையும் மதவாதத்தையும் அவர்களுக்கு ஊட்டி, அதன்மூலம் நாட்டைக் குட்டிச்சுவராக்கியவர்களுமே காரணமாகும். இதனால் இந்த நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டு, மிகவும் துன்பகரமான ஒரு காலகட்டத்தில் நாம் இருந்துகொண்டிருக்கின்றோம்.

நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் இன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையானது, காலத்தின் தேவையாகவும் மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதாகவும் இருப்பதையிட்டு எனது நன்றியை தெரிவிக்கின்றேன். தேவையான நேரத்தில் தேவையான ஒன்றை கொண்டுவந்திருந்தாலும் அதனை பாரபட்சமின்றி நடைமுறைப்படுத்துவதன் மூலமே நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைபயக்கும்.

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் தொடர்பில் ஆராய்வதற்கு முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரியினால் அமைக்கப்பட்ட குழுவினரின் ஆலோசனைகள் அடங்கிய அறிக்கையொன்று நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டு, பின்னர் அதன் பிரதிகள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களான எமக்கும் நீதி அமைச்சரினால் வழங்கப்பட்டிருந்தன. குறித்த ஆலோசனைகளில் அடங்கிய பல விடயங்களுடன் எம்மால் உடன்பட முடியாதிருக்கின்றது. உதாரணமாக 'Muslim' என்ற சொல் நீக்கப்பட்டு 'persons professing Islam' என்ற சொற்பிரயோகம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதேபோன்று, 'Nikah ceremony' என்ற சொல் நீக்கப்பட்டு 'Solemnization' என்ற சொற்பிரயோகமானது குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இதுவரை காலமும் இருந்த 'வலி' (தந்தை, தந்தை சார்ந்த சகோதரன் அல்லது தாயுடைய சகோதரன்) நீக்கப்பட்டு, பெண் விரும்புகின்ற ஒருவர் வலியாக இருக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பல விடயங்களில் நாங்கள் உடன்பாடு இல்லாதது குறித்து நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டினோம்.

அதனடிப்படையில், முன்னாள் அமைச்சர் பௌஸி தலைமையில், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவையும் அழைத்து, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் கலந்துரையாடலில் ஈடுபாட்டோம். இந்த விடயங்களை இஸ்லாமிய ஷரீஆவை அடிப்படையாக வைத்து ஆலோசித்தோம். ஏனெனில், இஸ்லாம் இறுதியாக நபி (ஸல்) அவர்களின் மூலம் பூரணப்படுத்தப்பட்ட ஒரு மார்க்கம். இதில் நெளிவுசுழிவுகள் கிடையாது. ஒரு சிலர் வேறு நாடுகளை சுட்டிக்காட்டி சிலவற்றை கூறுகின்றார்கள். அவ்வாறு, இஸ்லாத்தில் செய்ய முடியாது.

நமது நாட்டில் சுமார் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உலமாக்களைக் கொண்ட, அனைத்து முஸ்லிம்களாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மார்க்க அமைப்பே அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா. பல்வேறு கொள்கைகளைச் சார்ந்தவர்கள் இவ்வமைப்பில் இருந்தாலும் 'சூரா' அடிப்படையில் மேற்கொள்ளும் ஏகோபித்த தீர்மானத்தை அனைத்து முஸ்லிம்களும் அங்கீகரிக்கின்றனர். அந்தவகையில், ஜம்இய்யத்துல் உலமாவுடன் இணைந்து மேற்கொண்ட திருத்தங்கள் அடங்கிய ஆலோசனைகளை பாராளுமன்ற உறுப்பினர் பௌஸி தலைமையில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் 18 பேர் கையொப்பமிட்டு, முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் தொடர்பான திருத்தம் ஒன்றை நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவிடம் இன்று(நேற்று) கையளித்தோம். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 20 முஸ்லிம் எம்.பிக்களில் 18 பேர் இதில் கையொப்பமிட்டுள்ளனர் என்றார்.

## ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம்...

திருடர்களை பிடிக்கப்போவதில்லை என்பது தெரியும். திருடர்களை பிடிப்பதற்கு சட்டம் கொண்டுவரப்படப்போவதில்லை என்பதை அறிந்திருக்கவில்லை. நாங்கள் இதுதொடர்பில் இதற்கு முன்னரும் பேசியிருக்கிறோம். எனவே, இன்று நிறைவேற்றிவிட்டு பின்னர் திருத்தங்களை மேற்கொள்ளுங்கள்" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க, எங்களால் முன்வைக்கப்படும் திருத்தங்கள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்துவது சிறந்த முன்னேற்றமாகும். இந்த திருத்தங்களின் காரணமாகவா இந்த சட்டத்தை ஒத்திவைக்க முயற்சிக்கிறீர்கள். வேறு அச்சுறுத்தலின் காரணமாகவே இதனை செய்கிறார்கள். நாட்டுக்கு தவறான முன்னுதாரணத்தை வழங்க வேண்டாம் என்றார்.

காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி, ராஜித சேனாரத்ன எம்.பி ஆகியோரும் கருத்துத் தெரிவித்திருந்தனர். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித்பிரேமதாச, ஊழலுக்கு எதிரான புதிய சட்டம் முழு நாட்டின் நம்பிக்கையாக உள்ளது. இந்த மசோதாவை இன்று ஒத்திவைப்பது நாட்டுக்கு மோசமான செய்தியை வழங்குவதாக சுட்டிக்காட்ட சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, இது தள்ளிப்போனதை அனைவரும் ஒப்புக்கொண்டனர். 28 பக்கங்கள் திருத்தங்கள் உள்ளன. உச்ச நீதிமன்றம் மட்டும் 34 திருத்தங்களை அனுப்பியுள்ளது. இது நிரந்தரமான ஒத்திவைப்பு அல்ல. இது அரசு வேலை. நீதியமைச்சர் பொறுமையாக இதனைச் செய்கின்றார். இந்த பிரேரணை அடுத்த அமர்வின் 19 ஆம் திகதி விவாதிக்கப்படும். அன்றைய தினம் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்படும்.

## லாஃவ் எரிவாயு...

அதற்கமைய, 12.5 கிலோகிராம் லாஃப் சமையல் எரிவாயுவின் விலை 300 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இந்த விலை குறைப்புக்கமைய, 12.5 கிலோகிராம் எரிவாயுவின் புதிய விலையாக 3,690 ரூபா அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, 05 கிலோகிராம் லாஃவ் சமையல் எரிவாயுவின் விலை 120 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலையாக 1,476 ரூபா அறிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவில்...

தொடர்பில் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் அகழ்வுப்பணிகளுடன் தொடர்புடைய திணைக்களம் மற்றும் அமைப்புக்களுடன் விசேடகலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளவுள்ளதாகத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதவான் முன்னிலையில் நேற்று ஆரம்பமான அகழ்வுப் பணியின் போது முன்னதாக அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடுகளுக்கு அருகில் காணப்பட்ட பகுதிகள் தோண்டப்பட்ட நிலையில் மேலும் பல எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.அதே நேரம் பிளாஸ்ரிக் பொருள், வயர் உட்பட சில சான்றுப் பொருட்களும் சம்பவ இடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

முதல் நாள் அகழ்வில் 13 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் மேலதிக அகழ்வுப் பணிக்காக தற்காலிக அனைத்துப் பணிகளும் நிறுத்தப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.பிரதீபன் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ உள்ளிட்டவர்களினால் இந்த அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகப் பிரதிநிதிகள், பல்வேறு மனித உரிமை சட்டத்தரணிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்புகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரது கண்காணிப்புகளுக்கு மத்தியில் இந்த அகழ்வுப் பணிகள் நேற்றுக் காலை முதல் நடந்தது.

கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி கொக்குத்தொடுவாய் மத்தி பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் நீர் இணைப்பு மேற்கொள்வதற்காக கனரக இயந்திரத்தினால் தோண்டியபோது நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில் மனித எச்சங்கள் வெளிவந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளினுடையதாக இருக்கலாம் என கருதப்படும் தடயங்கள் தென்பட்டன. பச்சை இராணுவ சீருடை மற்றும் பெண்களின் உள்ளாடைகளும் அங்கிருந்து மீட்கப்பட்டிருந்தன.



இது பற்றி கொக்கிளாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கொக்குளாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர் . மறுநாள் பொலிஸாரால் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா குறித்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.அந்த பகுதியை நேற்று அகழ்வு செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டதோடு அதற்குரிய நபர்களுக்கான உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறும் அதுவரை எச்சங்கள் அழிவடையாமால் பாதுகாக்குமாறும் கொக்கிளாய் பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.அதன்படி நேற்று அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதுவரை சுமார் 6 பேருடையது என கருதப்படும் எலும்புகள் மீட்கப்பட்டுள்ளன.

எதிர்வருகின்ற வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் அனைத்து திணைக்களங்கள் மற்றும் சட்டத்தரணிளுடன் இடம்பெற உள்ள கலந்துரையாடலின் பின்னர் புதைகுழி தொடர்பான மேலதிக அகழ்வுகள் தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகப் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு மனித உரிமை சட்டத்தரணிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், வல்லிபுரம் கமலேஸ்வரன், பொது அமைப்புகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலரது கண்காணிப்புகளுக்கு மத்தியில் இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

## ஊழல் எதிர்ப்புச் சட்டம் ...

ராஜபக்ஷவின் விருப்பத்துக்கிணங்க தேர்தலை நடத்தாமல் கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு முன்னைய பிரதிநிதிகளை அழைக்கும் சட்டமூலத்தை ஏற்றுக்கொண்டதாகவும் இவ்வாறான முக்கிய சட்டமூலத்தை பெரிதாக கவனத்தில் கொள்ளவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நேற்று (06) பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மீதான இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது ,

சபையில் முன்வைக்கப்பட்ட சட்டமூலத்தை விட வலுவான ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை 2022 டிசம்பரில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார சமர்ப்பித்திருந்தாலும் அரசாங்கம் அது தொடர்பில் பொருட்படுத்தவில்லை என்றும், இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டிருந்தால் கடந்த காலத்தில் நாடு இழந்த,நாட்டிலிருந்து திருடப்பட்ட சொத்துக்கள்,வளங்களை மீளப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

இந்த சட்டமூலத்துக்கு எதிர்க்கட்சி முன்வைத்த வலுவான திருத்தங்களை நீக்கி எஞ்சிய திருத்தங்களை மட்டும் ஏற்றுக்கொள்வதன் மூலம்,ஐ.எம்.எப். நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காகவே அரசாங்கம் இந்நேரத்தில் ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை சமர்ப்பித்துள்ளதாக புலப்படுகிறது. இது உண்மையிலேயே ஊழலை இல்லாதொழிப்பதற்காக அல்ல. எனவே நேர்மையாக இந்தச் சட்டத்தின் மூலம் ஊழல்,மோசடி,திருட்டை ஒழித்து வெளிப்படையான ஆட்சியை உருவாக்க முடியுமா? என்பது குறித்து இதில் சிக்கல் நிலவுகிறது.

தேசத்தின் நலன் கருதி ஒத்துழைப்பு நல்க முன்வாருங்கள் என்று ஜனாதிபதி கூறினாலும் குறித்த தேசிய நலன் என்பதால் கருதப்படுவது திருடர்களைப் பிடிப்பதா? திருடர்களைப் பாதுகாப்பதா? என்பது பிரச்சினைக்குரிய விடயம்.இந்தச் சட்டத்தில் சில சாதகமான அம்சங்கள் இருந்தாலும் பல பலவீனங்கள் இருப்பதால்,அது குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

## நிதி வங்குரோத்து...

நியமிக்கப்பட்டுள்ளனர் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (06) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கமைய, (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னி ஆரச்சி, டி.வீ. சானக, விஜித ஹேரத், மஹிந்தானந்த அளுத்கமகே, இரான் விக்கிரமரத்ன, அசோக அபேசிங்ஹ, ஜயந்த கெட்டகொட, ஹர்ஷண ராஜகருணா, (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட, சஞ்ஜீவ எதிரிமான்ன, நாலக பண்டார கோட்டேகொட, சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் மற்றும் (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார ஆகியோர் இந்தக் குழுவில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை காரியவசத்தின் நியமனத்துக்கு எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், நாட்டின் வங்குரோத்து நிலைக்கான காரணத்தை ஆராய ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரைப் நியமித்தமையை ஏற்கமுடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கிரியெல்லவின் இந்த கருத்து தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா தனது கவலையை வெளியிட்டதுடன், இலங்கையின் இன்றைய நிலைக்கு அனைத்து அரசாங்கங்களும் பொறுப்பு எனவம் தெரிவித்துள்ளார்.

## இலங்கை - தமிழக...



தமிழ்நாடு திருச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கை-தமிழக மலையக தமிழர் தோழமை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினர்களாக, கௌரவ தலைவர்- இலங்கை எம்.பி மனோ கணேசன், தலைவர்- எம். எஸ் செல்வராஜ், துணை தலைவர்கள்-பி.டி. ஜோன்,கே. ஏ. சுப்பிரமணியம், மிசா மாரிமுத்து, செயலாளர்- சட்டத்தரணி தமிழகன், துணை செயலாளர்கள்- சட்டத்தரணி ஈசன், டார்வின் தாசன் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக செல்வராணி, கலா மற்றும் ஆலோசகர் குழு உறுப்பினர்களாக முனைவர் ஸ்டீபன் அன்டணி, பிஜோய், சிவஞானம், டி. எஸ். எஸ். மணி, அஜித் மேனன் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை-தமிழக மலையக தமிழர் தோழமை இயக்க அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய, இலங்கையின் கொழும்பு மாவட்ட எம்.பியும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் கூறியதாவது,

இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க நாள். இலங்கையில் வாழும் இந்திய-தமிழக வம்சாவளி மலையக தமிழரும் இந்திய தமிழகத்துக்கு தாயகம் திரும்பியதாக சொல்லப்படும் தமிழகத்தில் வாழும் மலையகத் தமிழரும் அமைப்பு ரீதியாக ஒன்றுபடும் நாள். இதன்மூலம் இலங்கையில் வாழும் இந்திய தமிழக வம்சாவளி மலையக தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களது அபிலாஷைகள் தொடர்பில் தமிழகத்தில் புதிய ஒளி பாய்ச்சப்படுகிறது. அதேபோல் தாயகம் திரும்பியதாகச் சொல்லப்பட்டு தமிழகத்தில் வாழும் மக்களின் துன்பங்களையும் அறியக் கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் ஏறக்குறைய பதினைந்து இலட்சம் இந்திய-தமிழக வம்சாவளி மலையகத் தமிழர் வாழ்கிறார்கள். அதேபோல் தாயகம் திரும்பியதாக சொல்லப்படுவோர் தமிழகத்தில் இருபத்தைந்து இலட்சம் பேர் வாழ்கிறார்கள். ஆக மொத்தம் நாற்பது இலட்சம்.

இந்த இருபத்தைந்து இலட்சம் பேருடன் சேர்த்து மொத்தம் நாற்பது இலட்சம் பேரும் இலங்கையில் குடியுரிமையுடன் வாழ்ந்திருக்க வேண்டும். வாழ்ந்திருந்தால் இலங்கை பாராளுமன்றத்தில், நாம் நாற்பது எம்.பிகள் இருந்திருப்போம். அதன்மூலம் அரசியல் ரீதியாக நாம் பலம் பெற்று இருந்திருப்போம். எம்மை மீறி எவரும் இலங்கையில் அரசு அமைக்க முடியாது. ஆகவே எமது உரிமைகள் இன்றைய நிலைமையை போல் பறிக்கப்படும் நிலைமை ஒருபோதும் உருவாகி இருக்காது.

ஆனால், 1948ல் எமது குடியுரிமை பறிக்கப்பட்டது. அப்புறம் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இனவாத அரசை எதிர்த்து அன்றைய நமது தொழிற்சங்கத் தலைமைகள் மக்களை அணி திரட்டி போராட்டங்களை செய்ய தவறினார்கள். அப்போது காத்திரமாக செயற்பட்டு இலங்கை அரசை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தவறிய, இந்திய அரசு, அதன் பின் 1964 எம்மிடம் கலந்தாலோசிக்காமலேயே பெருந்தொகையான எமது மக்களை இந்தியாவுக்கு திருப்பி எடுத்து எம்மை பலவீனமடையவும் செய்து விட்டது.

அன்று அப்படி தாயகம் திரும்பிய மக்களின் வாழ் நிலைமையும் மிகவும் மோசமாகவே இருக்கிறது. இவர்களுக்கு சரியான நல்வாழ்வுத் திட்டங்களை அமைத்து தர இந்திய அரசு தவறி விட்டதையும் இன்று நான் கண்கூடாக காண்கிறேன்.

மறுபுறம், 1948 முதல் 1972 வரை, இலங்கை பிரித்தானிய முடியாட்சியின் கீழ்தான் இருந்தது. அதன்பிறகுதான் இலங்கை குடியரசானது. குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டபோதும் 1956 சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டபோதும் 1964ல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்ட போதும் பிரித்தானிய அரசு வாய் திறக்கவில்லை. அன்றைய நமது தொழிற்சங்கத் தலைமைகளும் இந்த அநீதிகளை பிரித்தானிய முடியாட்சிக்கு எடுத்து கூறி, நியாயம் கேட்கவும் இல்லை. எல்லாவற்றுக்கும் மேல் எமது மூதாதையினரை 1823 முதல் இலங்கைக்கு கொண்டு சென்று, தமக்கு ஏற்றுமதி வருவாய் தந்த பெருந்தோட்டங்களை அமைத்ததும், பிரித்தானிய முடியாட்சிதான். ஆகவே இந்த ஒட்டு மொத்தம் நாற்பது இலட்சம் தமிழர்கள் தொடர்பாக இலங்கை அரசு, இந்திய அரசு, பிரித்தானிய அரசு ஆகியவற்றுக்கு பெரும் தார்மீக பொறுப்பும், கடமையும் இருக்கின்றன. இந்த அரசுகள் தமது தேசிய சொந்த நலன்களுக்காக இனியும் நம்மை எடுப்பார் கைப்பிள்ளைகளாக பயன்படுத்த விட முடியாது. இந்த மூன்று அரசுகளும் முன்வந்து எமக்கான நல்வாழ்வுத் திட்டங்களை அமைத்து தர வேண்டும். அதனை நாம் இனி தேசிய, சர்வதேசிய அரங்குகளில் வலியுறுத்தி தீர்வுகளை தேடிப் பெறுவோம். இலங்கை-தமிழக மலையக தமிழர் தோழமை இயக்கத்தின் மூலம் இந்த நோக்கங்களை நாம் வலியுறுத்துவோம்.

## சீமெந்து விலை...

சீமெந்து 50 கிலோகிராம் மூடையொன்றின் விலை 300 ரூபாவால் குறைப்பதற்கு சீமெந்து நிறுவனங்கள் தீர்மானித்துள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அமைச்சில் நேற்று (06) இது தொடர்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், சீமெந்து விலைக் குறைப்பு தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கடந்த காலங்களில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

டொலரின் பெறுமதி வீழ்ச்சியை கவனத்தில் கொண்டு, சீமெந்து நிறுவனங்களுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே அந்த நிறுவனங்கள் இந்த இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன. மேலும், கட்டுமானத் துறைக்கான இரும்பு, டயில், அலுமினியம் மற்றும் வயர் போன்ற பொருட்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் அவற்றின் விலைகளை குறைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் கட்டுமானத்துறையை மேம்படுத்தும் நோக்கில் அந்த பொருட்களின் விலைகளையும் விரைவில் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை தற்போது சந்தைகளில் விற்பனையாகும் சீமெந்து மூடையொன்றின் அதிகபட்ச சில்லறை விலை 2600 ரூபாவாக காணப்படுவதுடன் இன்றிலிருந்து (நேற்றிலிருந்து) அதன் அதிகபட்ச சில்லறை விலை 2300 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இந்திய சமையற்...

இளைஞரே உயிரிழந்துள்ளார்.

பலத்த காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உணவகத்தில் சந்தேகநபருக்கும் உயிரிழந்தவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியதை அடுத்து இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கண் அறுவை...

அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே இவர் உயிரிழந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த அறுவை சிகிச்சையைத் தொடர்ந்து ஏற்பட்ட மயக்க நிலையை அடுத்தே அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்த பெண் ஹங்வெல்ல, கொஸ்கம பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாய் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், கண் அறுவை சிகிச்சைக்காக உயிரிழந்த நோயாளிக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட மயக்க மருந்தினால் இந்த உயிரிழிப்பு நேர்ந்திருக்கலாம் என்று சுகாதார தொழில் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள மருத்துவ தொழில் வல்லுநர்கள் மையத்தில் நேற்று (06) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தப் பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ள மயக்கமருந்தான ப்ரொபோஃபோல் வகையைச் சேர்ந்த மருந்தை பயன்படுத்தியதன் காரணமாகவே இரு வாரங்களுக்கு முன்னர் பேராதனை போதனா வைத்தியசாலையில் குழந்தையொன்று உயிரிழந்திருந்தது. அந்தச் சம்பவத்தின் உண்மைத் தன்மையை நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு கோரியபோது, அதனை மறுத்து சிறுவர்களுக்கு இந்த வகையைச் சேர்ந்த மருந்து பயன்படுத்துவதில்லை என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டிருந்தது.

ஆனால், பேராதனை போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த குழந்தைக்கு பயன்படுத்திய அதேவகையான மயக்க மருந்தே உயிரிழந்த பெண்ணுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த பெண்ணுக்கான கண் அறுவை சிகிச்சை இடம்பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்துள்ளதாகவும் சிகிச்சை இடம்பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இருதயம் செயலிழந்தமையினாலேயே இவர் உயிரிழந்துள்ளதாகவும் அரசாங்கமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.

இந்த மரணத்துக்கு உறுதியான காரணத்தை குறிப்பிட முடியாது. இந்த மரணம் மருந்தினால் நேர்ந்துள்ளதா? அல்லது வேறு காரணங்களால் இடம்பெற்றுள்ளதா என்பதை உடனடியாகக் கூற முடியாது. இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவத்துக்கு தேசிய கண் வைத்தியசாலை மருத்துவர்கள் சகலரும் எங்களின் கவலையை தெரிவித்துக்கொள்கிறோம். இந்தச் சம்பவம் தொடர்பில் பரிசோதனை செய்வதற்கு வைத்தியர்கள் மூவரடங்கிய விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனையும் இடம்பெற்றுள்ளது. மரண பரிசோதனை அறிக்கை உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன. சுகாதார அமைச்சு இதுகுறித்து விசேட கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கிறோம். மருந்துகளின் தரம் தொடர்பில் பிரச்சினை இருக்கிறதா என்பது குறித்து ஆய்வு செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது. நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் கடந்த காலங்களில் இதுபோன்ற துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. அதனால், இந்த சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம் என்றார்.

## தமிழரிடமிருந்து...

சுட்டிக்காட்டியுள்ளார் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் மோதல் நடந்தபோது, பல தமிழ் மக்கள் தமிழீழ வைப்பகத்தில் நிறைய தங்கத்தை அடகு வைத்திருந்தார்கள். நிறைய பணத்தை வைப்பு செய்திருந்தார்கள். அங்கு வைப்பிலிடப்பட்டிருந்த பணத்தை அடையாளம் காண முடியவில்லையென வைத்தாலும், அங்கு வைப்பிலிடப்பட்டிருந்த தங்கத்தை தானே எடுத்து அரசாங்கத்திடம் ஒப்படைத்ததாக அப்போதைய இராணுவத்தளபதி சரத் பொன்சேகா இந்த சபையிலும் கூறியிருக்கிறார்.இந்த நகைகளுக்கு என்ன நடந்தது?

தமிழீழ வைப்பகத்தில் நகைகளை அடகு வைத்தவர்கள், அதற்கான ஆதாரமாக அடகுச்சீட்டுக்களை வைத்துள்ளனர். ஆனால் அவர்களுடைய நகைகளும் பணங்களும் அப்போதைய மஹிந்த குடும்பத்தினதும்-குறிப்பாக கோட்டாபய ராஜபக்ஷவினதும் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக சரத் பொன்சேகா வெளிப்படையாகவே சொல்லியிருந்தார்.

ஆனால், இன்று வரை அந்த மக்கள் தங்கமும் நகையும் கிடைக்காமல் அவை கிடைக்குமென காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? இந்த ஊழலுக்கு என்ன விசாரணை? யார் விசாரிக்கப் போகிறீர்கள்? விசாரணை நடக்காது.

மத்திய வங்கியில் பிணைமுறி ஊழல் இந்த நாட்டின் மிகப்பெரிய ஊழல். உலகின் எந்த நாட்டிலும் நடக்காத அளவில் மிகப்பாரியளவில் கொள்ளையடிக்கப்பட்டது. ஆனால் இன்று கொள்ளையடித்தவர்கள் எல்லோரும் பெரும் பெரும் பதவிகளில் உள்ளனர். இந்த நாட்டில் அவர்கள் ஓடி உலாவித் திரிகிறார்கள். பலர் வெளிநாடுகளில் ஒளிந்துள்ளனர். இந்த நாடு இதுவரை ஏதாவது நடவடிக்கை எடுத்ததா? யாரையாவது கைது செய்ததா? ஏற்கெனவே தங்க நகை விடயத்தில் யாரையாவது கைது செய்ததா? யாரும் கைது செய்யப்படவில்லை. அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் சொத்துக்களுக்கு என்ன நடந்தது? தமிழீழ வைப்பகத்தின் சொத்துக்களுக்கு என்ன நடந்தது? நீங்கள் கோடி கோடியாக கொள்ளையடித்த புலிகளின் சொத்துக்களுக்கு என்ன நடந்தது? குமரன் பத்மநாதனை கைது செய்து அவரிடமிருந்து பறித்த பணத்துக்கு என்ன நடந்தது? இதை விசாரியுங்கள். இதை விசாரித்தால் இந்த நாட்டின் ஊழல் இல்லாமல் போகும்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் உகண்டாவிலும் இன்னும் பல நாடுகளிலும் பல முதலீடுகளை செய்துள்ளனர். அவர்களின் பணம் அந்த நாடுகளில் எப்படி முதலீடு செய்யப்பட்டது? எப்படி, எவ்வளவு தங்கம், பணம் முதலீடு செய்யப்பட்டது என்பதை உங்களால் உறுதிப்படுத்த முடியுமா? முடியாது. பிறகு ஊழலுக்கு ஒரு சட்டம், விவாதம். பிறகு அதை நிறைவேற்றுவது. இப்படியெல்லாம் செய்து காலத்தை இழுத்தடித்து கண்துடைப்பு நடவடிக்கையாகவே இந்த சபை நடவடிக்கைகள் சென்று கொண்டிருக்கின்றன என்றார்.

## வங்கிகளின்...

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த வீதங்கள் 200 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்படவுள்ளது. எதிர்பார்த்ததிலும் பார்க்க விரைவான பணவீக்க வீழ்ச்சிச் செயல்முறையை அடையக்கூடியதாகவுள்ளது.

தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகளின் உன்னிப்பான பகுப்பாய்வொன்றினைத் தொடர்ந்து, பொருளாதாரத்தின் உள்ளார்ந்த ஆற்றலை அடைவதை இலகுபடுத்தவும் பணவீக்கத்தை நடு ஒற்றை இலக்க மட்டங்களில் நிறுத்தி நிதியியல் சந்தைகளிலுள்ள அழுத்தங்களைத் தளர்த்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய வங்கியின் மூலமான நாணயக் கொள்கையின் இக்குறிப்பிடத்தக்க தளர்த்தலின் நன்மைகளைத் தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் பெற்றுக்கொடுக்கவும் அதன்மூலம் எதிர்வருகின்ற காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகள் மீளெழுச்சியடைவதற்கு ஆதரவளிக்குமாறு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறை அறிவித்துள்ளது.

இதேவேளை, மத்திய வங்கியின் வட்டி வீதம் நூற்றுக்கு 2 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. எமது பணவீக்கம் அதிகரித்த நிலையில் மத்திய வங்கியின் கடனுக்காக வட்டி வீதம் 16.5 வரையிலும் வைப்புக்கான வட்டி வீதம் 15.5 சதவீதத்தாலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பலனாக பணவீக்கம் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று (06) ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அதற்கமைய, இந்த வருடத்தின் மூன்றாவது காலாண்டில் பணவீக்கத்தின் அதிகரிப்பு வீதத்தை தனி இலக்கத்துக்கு கொண்டுவரக் கூடியதாக இருக்குமென்று எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், இதனடிப்படையில் ஏனைய பொருளாதார நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்காக வட்டி வீதங்களை படிப்படியாக குறைப்பதற்கு மத்திய வங்கி நடவடிக்கை எடுத்து வருகின்றது. மத்திய வங்கியின் இந்த தீர்மானத்துக்கமைய வணிக வங்கிகளின் கடன் வட்டி வீதம் குறைக்கப்பட வேண்டும்.அதற்கு எதிர்காலத்தில் மத்திய வங்கி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# 13ஆவது திருத்தத்தை திணிக்கின்ற முயற்சிகளுக்கு துணைபோகக்கூடாது

## தமிழ்க் கட்சிகள் தெளிவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென்கிறார் யோதிலிங்கம்



13ஆவது திருத்தத்தை திணிக்கின்ற முயற்சிகளுக்கு தமிழ்க் கட்சிகள் ஒருபோதும் துணைபோகக்கூடாது. அது இலங்கை - இந்திய அரசுகள் பேசி முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தம். இது எந்த வகையிலும் தமிழ் மக்களுக்குத் தீர்வாக அமையாது. ஆகவே, இது தொடர்பாக தமிழ்க் கட்சிகள் தெளிவான நிலைப்பாட்டை எடுக்கவேண்டுமென்று சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநரும் அரசியல் ஆய்வாளருமான சட்டத்தணி சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

13ஆவது திருத்தம் தற்போது மீண்டும் பேசு பொருளாக மாறியுள்ளது.

இந்தியா எவ்வாறாயினும் 13ஆவது திருத்தத்தை அரசியல் தீர்வாகத் திணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

தமிழ் நாட்டின் பாரதிய ஜனதாக் கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை புலம்பெயர் நாடுகளுக்குச் சென்று குறிப்பாக, லண்டனுக்கு சென்று புலம்பெயர் தரப்புகளோடு 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பேசியிருக்கிறார்.

சர்வதேச நாணய நிதியம் இன்று எப்பாடுபட்டாவது இனப் பிரச்சினையைத் தீருங்கள் என்று ஒரு நிபந்தனையை வைத்ததாகக் கூறப்படுகிறது.

அதேபோல படையினர் எண்ணிக்கையை ஒரு இலட்சமாகக் குறைக்குமாறு நிபந்தனை வைத்ததாகவும் சொல்லப்படுகிறது.

ஆகவே, இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஏதோ ஒரு வகையில் இந்தப் பிரச்சினையை தீர்க்கவேண்டிய ஒரு கட்டாயம் வந்திருக்கிறது.

இந்தியாவுக்கும் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பில் 13 க்கு அப்பால் செல்வதற்கான விருப்பங்கள் எவையும் இல்லை. இந்நிலையில், தமிழ்த் தரப்பை எப்படியாவது 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்கவைக்கவேண்டும் என்கின்ற ஒரு வகையான அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

13ஆவது திருத்தம் ஏற்கனவே யாப்பில் உள்ள ஒரு விடயம். அதனை நடைமுறைப்படுத்துவது அரசினுடைய கடமை.

இதைவிட 13ஆவது திருத்தம் தொடர்பான பொறுப்பு தமிழ் மக்களுக்கு இல்லை. ஏனெனில், 13ஆவது திருத்தம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டது.அது இரண்டு அரசுகளும் தங்களுக்குள் பேசி கொண்டுவரப்பட்ட ஒரு திட்டம். தமிழ் மக்களுக்கு அது தொடர்பான எந்த விதமான பொறுப்பும் இல்லை.

அதேவேளை, அரசியல் தீர்வாகத் திணிக்கின்ற ஒரு முயற்சி இடம்பெறுகிறது.

ஆகவே, இந்த முயற்சியை தமிழ் மக்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. 13ஆவது திருத்தம் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு எந்த வகையிலும் போதுமானதாக இல்லை.

அது ஒற்றை ஆட்சிக்குட்பட்ட ஒரு அரசியல் தீர்வு. ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட ஒரு திருத்தம் தான் 13 ஆவது திருத்தம். ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட எந்த அதிகாரப் பகிர்வும் நடைமுறையில் தமிழ் மக்களுக்கு எந்தவித பயனையும் தரப்போவதில்லை. இதைவிட பல நெருக்கடிகள் 13 ஆவது திருத்தத்தில் இருக்கின்றன. அதாவது, நிர்வாகத்துறை அதிகாரம் முழுமையாக ஆளுநரிடமே இருக்கிறது.

முதலமைச்சரும் அமைச்சரும் வெறுமனே ஆலோசனை கூறுபவர்களாக மட்டம் தான் இருக்கிறார்கள்.

மாகாண சபைச் சட்டம் இயற்றுவதில் பல்வேறு தடைகள் இருக்கின்றன. பாராளுமன்றம் ஒரு தடை, ஆளுநர் ஒரு தடை, ஜனாதிபதி ஒரு தடை, சட்டமா அதிபர் ஒரு தடை, உயர் நீதிமன்றம் ஒரு தடை என்று சொல்லி பல தடைகள் இருக்கின்றன.

இதைவிட தமிழ் மக்களினுடைய கூட்டிருப்பை, கூட்டுரிமையை, கூட்டு அடையாளத்தை, பேணக்கூடிய வகையிலே வடக்கு, கிழக்கு இணைக்கப்படவில்லை. அது இப்போது பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, இவ்வாறான ஒன்றை தமிழ் மக்கள் ஒருபோதும் அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது.

இது தொடர்பாக ஆதரிக்கின்ற தமிழ்க் கட்சிகள் இது தொடர்பாக முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது என்பது வேறு அதனை அரசியல் தீர்வாகத் திணிப்பதென்பது வேறு.

இங்கே நடைமுறைப்படுத்துவது என்று சொல்லிக்கொண்டு அரசியல் தீர்வாகத் திணிக்கின்ற முயற்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் திணிக்கின்ற முயற்சிகளுக்கு தமிழ்க் கட்சிகள் ஒருபோதும் துணைபோகக் கூடாது.

அவ்வாறு துணை போனால் அது தமிழ் மக்களுக்கு செய்கின்ற பாரிய துரோகமாகத்தான் இருக்கும் என நான் நினைக்கின்றேன் என்றார்.

## ஜனாதிபதியை சந்தித்தார் விமானப்படைத் தளபதி



புதிய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் (05) பிற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார். இச்சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் 19 ஆவது விமானப்படைத் தளபதியாக எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ ஜனாதிபதியினால் அண்மையில் நியமிக்கப்பட்டார்.

இதற்கிணங்க பதவியேற்ற பின்னர், புதிய விமானப்படைத் தளபதி சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதியை சந்தித்ததுடன் நினைவுச் சின்னமொன்றையும் கையளித்தார்.

இதேவேளை, புதிய விமானப்படைத் தளபதி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 22ம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்:** பொருள் வரவும் அதனால் மனமகிழ்ச்சியும் உண்டு. வெளிநாட்டு நண்பர்களால் உதவிகள் உண்டு.

**ரிஷபம்:** எதிர்பார்த்துக் காத்திருந்த உதவி எதிர்ப்பாராத வகையில் கிடைக்கும். தொழில் வியாபார லாபங்கள் உண்டு.

**மிதுனம்:** உங்கள் நிலையைத் தக்க வைத்துக் கொள்ள முழுமையான உழைப்பு அவசியம். எதற்கும் அவசரம் வேண்டாம்.

**கடகம்:** உடல்,மன நோய்களால் அவதிப்படுவீர்கள். புதிய முயற்சிகள் வேண்டாம். எதிரிகளின் கை ஓங்கும்.

**சிம்மம்:** காதல், அல்லது திருமணம் நிச்சயிக்கப்படும், கூட்டு வியாபார நன்மைகள், லாபங்கள் உண்டு.

**கன்னி:** தேவைக்கேற்ப பண வருவாய் அமையும். கேட்ட கடன் கிடைக்கப்பெறுவீர்கள்.

**துலாம்:** உடல் அசதி, நோயால் சற்று மந்த நிலையை அனுபவிப்பீர்கள். குடும்ப சுகம் உண்டு.

**விருச்சிகம்:** தாயாரின் உடல்நிலை தொடர்பாக கவனம் செலுத்துங்கள். வாழ்க்கை முன்னேற்ற ஏற்பாடுகளைச் செய்வீர்கள்.

**தனுசு:** எதையும் தைரியமாகத் துணிந்து செய்வீர்கள். நினைத்த பணத்தொகை உங்கள் கரங் கிட்டும்.

**மகரம்:** முக்கியமானவர்களுடன் உரையாடும்போது வார்த்தைகளைக் கவனமாகப் பிரயோகியுங்கள், தனச் சேதம் உண்டு.

**கும்பம்:** எதிர்பாராத வகையில் பரிசுப் பொருள்கள் கிடைக்கப்பெறுவீர்கள். வீண் மனக் குழப்பம் வேண்டாம்.

**மீனம்:** தேவையற்ற செலவுகளை குறைத்துக் கொள்வது நல்லது. வாகனங்களில் பயணிக்கும் போது எச்சரிக்கை வேண்டும்.

| | |
|---|---|
| திதி | :பஞ்சமி பி.இ.12.17 வரை பின் சஷ்டி (தேய்) |
| நட்சத்திரம் | :சதயம்; பி.ப.10.16 வரை பின் பூரட்டாதி |
| யோகம் | :சித்த யோகம் பி.ப.10.16 வரை பின் மரண யோகம் |
| வார சூலை | :மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது |
| நல்லநேரம் | :மு.ப. 5.56 – 6.56 மணி வரை |
| ராகுகாலம் | :10.26 – 11.56 மணி வரை |
| எமகண்டம் | :2.56 - 4.26 மணி வரை |
| குளிகை | :7.26 – 8.56 மணி வரை |
| சந்திராஷ்டமம் | :கடக ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |
| தனஅதிஷ்டம் | : மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம்; (பிறந்தவர்களுக்கு) |
| விஷேட தினம் | : ------- |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

## பாராளுமன்ற உறுப்பினர்களின் அஞ்சல் வசதிகளுக்காக புதிய முத்திரை வெளியீடு




பாராளுமன்ற உறுப்பினர்களின் அஞ்சல் நடவடிக்கைகளுக்கான 50 ரூபா பெறுமதியான புதிய முத்திரை வெளியீடு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்ற நூலகத்தில் நேற்று (06) இடம்பெற்றது.

இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் முத்திரைப் பணியகத்தினால் இந்த முத்திரை வெளியிடப்பட்டதுடன் இதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களின் பலதரப்பட்ட அஞ்சல் தேவைகளை எளிதாக நிறைவேற்றிக்கொள்ளவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரியெல்ல, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன, தபால்மா அதிபர் எம்.ஆர்.பி. சத்குமார உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## தர்கா நகரில் சாதுலியா மனாகிப் மஜ்லிஸ்

பேருவளை நிருபர்

ஷாதுலிய்யா தரீக்காவின் ஸ்தாபகர் குத்புல் அக்பர் இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (றழி) அவர்களின் 850ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு வரலாற்றுப் பிரசித்திபெற்ற தர்காநகர் இப்றாஹிமிய்யா ஸாவியாவில் சாதுலியா மனாகிப் மஜ்லிஸின் தமாம் வைபவம் இடம்பெறவுள்ளது.

மௌலவி முஹம்மத் மபாஸ் ஹுஸைன் (பஹ்ஜி) தலைமையில நாளை மறுதினம் (09) ஞாயிற்றுக்கிழமை மாலை மஃரிப் தொழுகையின் பின்னர் இடம்பெறவுள்ள இந்நிகழ்வின்போது கலீபத்துல் குலபா மௌலவி எம்.இஸட்.எம் முஹம்மத் ஸுஹூர் ஆலிம் (பாரி) அவர்களுக்கான வரவேற்பும் இடம்பெறவுள்ளதாக முக்கத்தமுஷ் சாதுலி முஹம்மத் மசூன் தெரிவித்தார்.

## கசிப்பு வைத்திருந்தவருக்கு அபராதம்

தன்வசம் ஒன்றரை லீட்டர் கசிப்பை வைத்திருந்த ஒருவருக்கு மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

மானிப்பாய் பகுதியில் ஒன்றரை லீட்டர் கசிப்பு வைத்திருந்த 28 வயதுடைய இளைஞரொருவரை மானிப்பாய் பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

இந்நிலையில், இளைஞன் விசாரணைகளின் பின்னர் நேற்று வியாழக்கிழமை(06) மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதன் போது குற்றத்தைக் ஒப்புக்கொண்டதால் 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து நீதவான் நீதிமன்ற நீதவான் குறித்த இளைஞனை விடுதலை செய்தார்.


**வெற்றி நிச்சயம்**



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/



**வெளிவந்துவிட்டது!**

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை விசேட மாதிரி வினாத்தாள் தொகுப்பு**




பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

0761393805 / 0741684643
0777983308


## தேசிய தொழில் கண்காட்சி 2023 அனுசரணை Dialog Enterprise

### இலங்கையின் உள்ளூர் கைத்தொழிலாளர்களின் மிகப்பெரிய கண்காட்சி வெற்றிகரமாக நிறைவடைந்தது

டயலொக் எண்டர்பிரைஸ் (Dialog Enterprise) மூலம் இயங்கும் தேசிய தொழில் கண்காட்சி 2023, ஜூன் 22ஆம் திகதியன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன, கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்துறை அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர்கள், தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் ஆகியோர் உட்பட கைத்தொழில் அபிவிருத்தி சபை தலைவர் கலாநிதி சாரங்க அழகப்பெரும ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது.

20இற்கும் மேற்பட்ட தொழில்துறைகளைச் சேர்ந்த சுமார் 750 கூடங்களைக்கொண்ட மேற்படி கண்காட்சி, ஜூன் 22 முதல் 25 வரை நடைபெற்றது. தனி நபர்கள், தனியார் மற்றும் முப்படைகளைச் சேர்ந்தவர்கள் என 350 தனித்துவமான கண்காட்சியாளர்கள் தமது தயாரிப்புகள், தீர்வுகள் மற்றும் தொழில்நுட்பத்தைக் காட்சிப்படுத்தினர். நாடு முழுவதிலுமிருந்து சுமார் 100,000 பார்வையாளர்கள் மேற்படி தேசிய தொழில் கண்காட்சியை பார்வையிட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். உள்ளூர் கைத்தொழில்கள் மற்றும் தொழில்முனைவோரின் உச்சக்கட்ட முன்வைப்புகளாக இக்கண்காட்சி அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட 100க்கும் மேற்பட்ட கார்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அத்துடன், ஜூன் 21ஆம் திகதியன்று காலிமுகத்திடலிலிருந்து பண்டாரநாயக்க மண்டபம் (BMICH) வரை கார் கண்காட்சியொன்றும் நடைபெற்றது. பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இதில் கலந்துகொண்டதுடன், நிறைவு விழாவில் அமைச்சினால் இலங்கையில் ஒரு சர்வதேச தொழில் கண்காட்சியின் அவசியத்தை எடுத்துரைக்கும் விதமாக 2024ஆம் ஆண்டின் தொழில் கண்காட்சிக்கான திகதியை அர்ப்பணிப்புடன் நிர்ணயித்து உறுதிசெய்யப்பட்டது.



Dialog Enterprise குழுமத்தின் பிரதம அதிகாரி நவீன் பீரிஸ் அவர்களால் பிரதமர் தினேஷ் குணவர்தன அவர்களுக்கு இங்கு விளக்கமளிக்கப்பட்டது. மேலும், படத்தில் இடமிருந்து வலமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி பிரதான நிதித்துறை குழுமத்தின் அதிகாரி Hong Zhou Wong.

Dialog Enteprise கூடத்திற்கு பிரதமர் தினேஷ் குணவர்தன வருகை தந்தபோது, பிரதமரை டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி வரவேற்றார். "டயலொக் எண்டர்பிரைஸ் போன்ற தனியார் நிறுவனங்கள் தேசிய கைத்தொழில் கண்காட்சிக்கு அனுசரணை வழங்குவதை அரசாங்கம் பெரிதும் பாராட்டுகின்றது. மேலும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள புதிய மற்றும் புதுமையான தொழில்நுட்பம் உள்ளூர் தொழில்துறைகளுக்கு குறிப்பிடத்தக்க பாதையை திறக்கும் என்று நான் நம்புகிறேன்" என பிரதமர் இங்கு குறிப்பிட்டார்.

கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன தனது குழுவினருடன் Dialog Enterprise கூடத்திற்கு விஜயம் செய்தார். இங்கு தனது கருத்துகளை தெரிவித்த அமைச்சர், "உள்ளூர் கைத்தொழில்களுக்கு தேசிய கைத்தொழில் கண்காட்சி போன்ற களத்தை வழங்குவதில் அமைச்சு மகிழ்ச்சியடைகிறது, மேலும் இந்நிகழ்வுக்கு Dialog Enterprise அனுசரணை வழங்கியதை நாங்கள் பாராட்டுகிறோம். இக்கண்காட்சிக்கு வருகை தரும் தொழில்துறையினர் மற்றும் வர்த்தகத் துறையினருக்கு இங்கு வழங்கப்படும் விளக்கமளிப்புகள் பயனுள்ளதாக இருக்கும் என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்'' என்றார்.

Dialog Enterprise சரியான நேரத்தில் வணிக மேம்பாட்டு உதவி மற்றும் வழிகாட்டுதலுடன் சமீபத்திய தொழில்துறை 2023 தொழில்நுட்பத்தை காட்சிப்படுத்தியது. நிறுவனம் தேசிய தொழில் கண்காட்சியின் 'Signature Enterprise Experience Stall' கூடத்தை பெருமையுடன் முன்னிலைப்படுத்தியது. அதிநவீன பாதுகாப்பு தீர்வுகள், IoT (இன்டர்நெட் ஒவ் திங்ஸ்), இணைப்பு, டிஜிட்டல் கொடுப்பனவுகள் மற்றும் வணிக நிதி மற்றும் கண்காணிப்பு மற்றும் ஃப்ளீட் முகாமை தீர்வுகள் இதில் அடங்கும். டயலொக் நிபுணர்கள் குழு, உலகத் தரம் வாய்ந்த வணிகப் பங்காளிகளின் பிரதிநிதிகளுடன் சேர்ந்து, வணிகச் சமூகத்தின் தேவைகளைப் பற்றி விவாதிக்கவும், அவர்களின் தேவைகளைப் பற்றி நன்கு புரிந்துகொள்ளவும், மேற்படி கண்காட்சி கூடங்களில் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

"Dialog Enterprise குழுமத்தின் பிரதம அதிகாரி நவீன் பீரிஸ் மேலும் தெரிவிக்கையில், " Dialog Enterprise இல் நாங்கள் எப்போதும் பெரிய மற்றும் சிறிய வணிகங்களின் மாற்றத்தை மேம்படுத்துவதற்கு புதுமையான டிஜிட்டல் தீர்வுகள் மற்றும் தளங்களை வழங்க முயற்சி செய்கிறோம். எங்கள் தொழில்களை புதுப்பித்தல் மற்றும் புத்துயிர் பெறுவதற்கான தேசிய முயற்சியை ஆதரிப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், மேலும் அவர்களின் இலக்குகளை அடைய அரசாங்க அதிகாரிகள், முகவர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் வணிகங்களுடன் நெருக்கமாக பணியாற்ற அர்ப்பணிப்புடன் செயலாற்ற உறுதிபூண்டுள்ளோம்'' என்றார்.

நிகழ்ச்சியின் நிறைவில் B.M.I.H. மெய்நிகர் கண்காட்சி https://vindustryexpo.idb.lk/ இல் ஜூலை 9ஆம் திகதிவரை நடைபெறும் வகையில் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூலை 07ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# ரணில் ராஜபக்ஷ பெயரின் அர்த்தம் புரிந்ததே!

அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் கடமையாற்றுவதற்காக சாகர காரியவசம் எம்.பி. தலைமையில் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (06) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கமைய, சட்டத்தரணி பவித்ராதேவி வன்னியாரச்சி, டி.வி.சானக, விஜித ஹேரத், மஹிந்தானந்த அளுத்கமகே, இரான் விக்கிரமரத்ன, அசோக அபேசிங்க, ஜயந்த கெட்டகொட, ஹர்ஷன ராஜகருணா, கலாநிதி மேஜர் பிரதீப் உந்துகொட, சஞ்சீவ எதிரிமான்ன, நாலக பண்டார கோட்டேகொட, சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் மற்றும் பேராசிரியர் ரஞ்சித் பண்டார ஆகியோர் இந்தக் குழுவில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

காரியவசத்தின் நியமனத்திற்கு எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், நாட்டின் வங்குரோத்து நிலைக்கான காரணத்தை ஆராய ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரை நியமித்தமையை ஏற்கமுடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கிரியெல்லவின் இந்தக் கருத்து தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா தனது கவலையை வெளியிட்டதுடன், இலங்கையின் இன்றைய நிலைக்கு அனைத்து அரசாங்கங்களும் பொறுப்பு என்று தெரிவித்துள்ளார். நேற்று பாராளுமன்றத்தில் இது தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 69 இலட்சம் வாக்குகளை பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ பிரதிநிதித்துவப்படுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் ஒருவர், நாட்டின் பொருளாதார பின்னடைவுக்கான காரணத்தை ஆராயும் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளார் எனில் அது திருடனிடமே திருட்டு குறித்து சாஸ்திரம் பார்க்கும் கதையல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்?

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ஜனாதிபதி பதவியில் இருந்து மக்கள் போராட்டத்தால் விரட்டப்பட்டதன் காரணம் என்ன? நாடு எதிர்கொண்ட அசாதாரண பொருளாதார நெருக்கடியின் தாக்கம் வீதிகளில் மக்கள் கோபத்தின் வடிவில் வெளிப்பட்டது.

நாட்டின் பணவீக்கம் அதிகரித்ததால் உணவுப்பொருட்கள், மருந்துகள் மற்றும் எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவியது. மின் தடை பரவலாக இருந்ததால் அதைத் தடுக்க அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறி சாதாரண மக்கள் வீதிகளில் இறங்கி போராடத் தொடங்கினர். அந்தப் போராட்டங்கள், பல வடிவங்களில் விரிவடைந்து ஆட்சியில் இருந்தவர்கள் வெளியேற கோரிக்கை விடுக்கும் அளவுக்கு வலுப்பெற்றன.

நாட்டின் குறைந்த எரிபொருள் இருப்புகளைப் பாதுகாக்கும் முயற்சியாக அத்தியாவசியமற்ற வாகனங்களுக்கான பெற்றோல் மற்றும் டீசல் விற்பனையை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

அந்த நெருக்கடிக்கு கோட்டாபய மற்றும் மஹிந்த ராஜபக்ஷவே காரணம் என்று அரசு எதிர்ப்பாளர்கள் குற்றஞ்சாட்டினர். ரஷ்யா உள்ளிட்ட நாடுகளிடம் இருந்து கூட கடனில் எரிபொருளைப் பெறுவதற்கு அரசாங்கம் முயற்சித்தது. ஆனால், அந்த முயற்சியில் அப்போதைய அரசு வெற்றி பெறவில்லை. தவறான தீர்மானங்களால் விவசாயத்துறை வீழ்ந்தது.

விவசாய வருமானமும் வீழ்ச்சி கண்டது. சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தது. இந்த விடயங்களையெல்லாம் நியாயப் படுத்தி ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுக்கொண்டிருந்த சாகர காரியவசம், இப்போது அந்த விடயங்களின் காரணங்களை ஆராய்வதற்கான குழுவில் நியமிக்கப்பட்டுள்ளமையை இந்த வருடத்தின் மிகப்பெரிய நகைச்சுவையாகவே எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. சிலவேளை சாகரவை நியமித்துள்ளதன் மூலம் ராஜபக்ஷக்களின் அணிக்குள் குழப்பத்தை ஏற்படுத்த எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாக இது இருக்குமோ என்று சந்தேகம் எழுந்தாலும், இந்த அணியில் உள்ள பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களை நோக்கினால் கடந்தகால விபரீதங்கள் தொடர்பில் அவர்கள் மீதும் விமர்சனங்கள் உள்ளன என்பதை குறிப்பிட்டுக் கூறவேண்டியுள்ளது.

ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசாங்கம் நாட்டு மக்களை மடையர்களாக்கிக் கொண்டிருக்கிறது என்று பரவலான விமர்சனங்கள் சொல்லப்பட்டாலும் அது நிதர்சனமான உண்மை என்றே இப்போது இந்த செயற்பாட்டினால் எண்ணத் தோன்றுகிறது. இந்தக் குழுவை இப்படி நியமிக்காமல் விட்டிருந்தால்கூட பரவாயில்லை என்று மக்கள் எண்ணுமளவுக்கு குழுவின் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை ஏற்புடையதல்ல.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அவரது அரசியல் எதிர்ப்பாளர்கள் ரணில் ராஜபக்ஷ என்று கூறுவதன் அர்த்தம் சாதாரண பொதுமகனுக்கும் இப்போதுதான் புரிகிறது. அதனைப் புரியவைத்திருப்பது ரணில் என்பதுதான் வேதனை கலந்த வேடிக்கை.



# மீண்டு வருமா மேற்கிந்தியத் தீவுகள் அணி?

எஸ்.ஸ்ரீதுரை

உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு நாடுகளின் கிரிக்கெட் அணிகளும் தாக்குதல், எதிர்த்தாக்குதல், தற்காப்பு, சரிவிலிருந்து மீண்டு வருதல் ஆகிய பல்வேறு உத்திகளுடன் கூடிய அணுகுமுறைகளை கடைப்பிடிப்பது வழக்கம்.

ஆனால், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அணுகுமுறை என்பது சென்ற நூற்றாண்டில் திறமை, தன்னம்பிக்கை ஆகிய இரண்டின் கலவையாக இருந்தது. சென்ற தலைமுறைகளைச் சேர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர்கள் அசாத்திய திறமை உடையவர்களாக இருந்ததால், சமயங்களில் அலட்சியமாக விளையாடினாலும், அதையும் மீறி அந்த அணியினால் மகத்தான பல வெற்றிகளைப் பெற முடிந்தது.

ஆனால், தற்போது அந்த அணிக்காக விளையாடுகின்ற வீரர்களிடம் திறமைக்குறைவுடன், வெற்றிபெற வேண்டும் என்ற உத்வேகமும் இல்லாத காரணத்தினால் அந்த அணி தொடர்ச்சியாகப் பல தோல்விகளைப் பெற்று வருகிறது. அத்தகைய மோசமான தோல்விகளின் உச்சமாக இந்த ஆண்டு ஒக்டோபர் - நவம்பர் மாதங்களில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. 50 ஓவர் கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிக்கு அந்த அணியினால் தகுதி பெறவும் இயலவில்லை என்பது உலகெங்கிலுமுள்ள கிரிக்கெட் ரசிகர்களுக்கு மிகவும் வருத்தமளிப்பதாக அமைந்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளைப் பொறுத்தவரை, கிரிக்கெட் என்பது கொண்டாட்டத்துக்குரிய ஒரு திருவிழா ஆகும். அங்குள்ள ரசிகர்களும் ரசிகைகளும் தங்களின் குடும்ப சகிதமாக கிரிக்கெட் மைதானத்துக்கு வருகை தருவதும் கிட்டார், டிரம்ஸ், டிரம்பட் போன்ற இசைக்கருவிகளை இசைத்தபடி ஆட்ட நேரம் முழுவதும் அவர்கள் ஆடியும் பாடியும் கொண்டாடி மகிழ்வதைக் காணக் கண்கோடி வேண்டும்.

உண்மையில் கூறுவதென்றால் அத்தீவுகளின் மக்கள் கொண்டாடுவதற்கு கிரிக்கெட்டை விட்டால் வேறு எதுவுமே இல்லை. அண்மைக் காலங்களில் தடகளப் போட்டிகளில் அத்தீவுகளைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் சில வெற்றிகளைப் பெற்று வருகின்றனர். குறிப்பாக ஜமைக்காவைச் சேர்ந்த உசைன் போல்ட் நூறு மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் பல பதக்கங்களை வென்றுள்ளார் என்ற போதிலும், அத்தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த அனைவரும் கொண்டாடி மகிழ்வது கிரிக்கெட் விளையாட்டையே. மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த கிரிக்கெட்



ரசிகர்களைப் பொறுத்தவரை, அங்குள்ள கிரிக்கெட் மைதானம் ஒவ்வொன்றும் கொண்டாட்டக் களமாகவே இருந்து வந்துள்ளது.

சேர் கார்ஃபீல்ட் சோபர்ஸ், கிளைவ் லொயிட், விவியன் ரிச்சர்ட்ஸ் ஆகியோர் தலைமை வகித்த அணிகள் உலகெங்கிலும் பற்பல வெற்றிகளைப் பெறுவதும், உள்நாட்டு மைதானங்களில் அந்த வெற்றிகளைத் தொடர்வதும் 1960கள் முதல் 1980 வரையிலும் ஒரு தொடர் நிகழ்வாகவே இருந்து வந்தது.

அதற்கடுத்த தலைமுறையைச் சேர்ந்த ரிச்சி ரிச்சர்ட்ஸன், பிரையன் லாரா, கார்ல் ஹூப்பர் உள்ளிட்டோர் தலைமை வகித்தபோது, ஏறக்குறைய அதே சூழல் தொடர்ந்தது. அப்படிப்பட்ட அணியினால், திறமை வாய்ந்த துடுப்பாட்ட வீரர்கள், வேகப்பந்து வீச்சாளர்கள், விக்கெட் கீப்பர்கள், சகலதுறை ஆட்டக்காரர்கள் ஆகியோரை அடுத்தடுத்து தயார் செய்ய முடியாமல் போனதுதான் சோகம்.

மேலும், 1999ஆம் ஆண்டு முதற்கொண்டு இந்த அணிக்குத் தலைமை வகித்த ஜிம்மி எடம்ஸ், சிவநாராயண் சந்திரபால், கிறிஸ் கெய்ல், டேரன் ஸமி உள்ளிட்டோர் வெற்றிகளை விடத் தோல்விகளையே அதிகளவில் பெற்றுத் தந்துள்ளனர்.

இடைப்பட்ட காலத்தில் டேரன் ஸமியின் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டு முறை 20 ஓவர் உலகக் கிண்ணத்தை வென்றது என்ற போதிலும், டெஸ்ட் கிரிக்கெட், 50 ஓவர்களைக் கொண்ட ஒருநாள் போட்டி ஆகியவற்றில் அந்த அணியின் திறமை குறைந்து கொண்டே வந்துள்ளது.

ரிகார்டோ போவெல், ட்வைன் பிராவோ உள்ளிட்ட வீரர்கள் சற்றே அதிரடியாக விளையாடக் கூடியவர்கள் என்றாலும், எப்போது அவர்கள் தங்கள் விக்கெட்டைப் பறி கொடுப்பார்கள் என்பதை யாராலும் கணிக்க முடியாது.

புதிய தலைமுறையைச் சேர்ந்த பந்துவீச்சாளர்களும் அவ்வளவாக சோபிக்கவில்லை. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, முந்தைய தலைமுறையைச் சேர்ந்த வீரர்களின் போராட்ட குணம் இன்றைய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர்களிடம் குறைந்துகொண்டே வந்திருக்கிறது. இக்காரணங்களினால் அவ்வணியின் வெற்றிவாய்ப்புகள் குறைந்து கொண்டே வந்தன.

இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து, ஒரு காலத்தில் வெல்ல முடியாத அணியாக விளங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியை இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடும் தகுதியைக் கூடப் பெற இயலாத நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

1975, 1979 ஆகிய இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற முதலிரு உலகக் கிண்ணங்களை அதிரடியாக வென்றதுடன், 1983ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது உலகக் கிண்ண போட்டியில் எதிர்பாராதவிதமாக இந்தியாவிடம் தோற்று இரண்டாம் இடத்தைப் பிடித்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி. தற்போது முதன்முதலாக உலகக் கிண்ண போட்டியில் இடம்பெற முடியாமல் போனதைக் கிரிக்கெட் ரசிகர்களால் அவ்வளவு எளிதாகக் கடந்து சென்றுவிட முடியாது.

குறிப்பாக, ஒவ்வொரு கிரிக்கெட் போட்டியையும் ஒரு திருவிழாவைப் போலக் கொண்டாடி ரசித்து மகிழும் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த ரசிகர்களுக்கும் இது மாபெரும் அதிர்ச்சியாகவே இருக்கும். தனித்தனித் தீவுகளாக இருக்கும் ஆறு நாடுகள் மட்டுமின்றி, பல்வேறு கிரிக்கெட் சங்கங்களும் இணைந்ததொரு சிக்கலான கூட்டணியாக மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை அமைந்துள்ளது.

தங்களது அணி உலகக் கிண்ணத்தில் இடம்பெறாத அதிர்ச்சியில் இருந்து அந்த சபை விரைவில் மீண்டு வரவேண்டும். அத்துடன் நில்லாமல், உலகளாவிய கிரிக்கெட் ஜாம்பவான்களின் துணையுடன் தங்களது அணிக்குப் புத்துயிரூட்டுவதற்கு முன்னுரிமை அளித்துச் செயற்பட வேண்டும். அடுத்த ஐ.சி.சி. உலகக் கிண்ணத்திற்கு மேற்கிந்தியத் தீவுகள் அணி தகுதி பெறுவதுடன், அந்தக் கிண்ணத்தை வெல்லும் திறமையையும் அந்த அணி அடைய வேண்டும். இதுவே உலகெங்கிலும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.

(நன்றி - தினமணி)

# 75 வருட சுதந்திரம் மற்றும் இராஜதந்திர உறவைக் கொண்டாடும் வகையில் வெளிநாட்டுத் தூதுவர்கள் மலைநாட்டில் நட்புரீதியான சுற்றுப்பயணம்









இலங்கையின் வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ்களை கையளித்த புதுடில்லியில் இருந்து கடமையாற்றும் 9 வெளிநாட்டுத் தூதுவர்களுக்கென 'எல்ல ஒடிஸி' விசேட நட்புறவு சுற்றுப்பயணமொன்று வெளிவிவகார அமைச்சு, ஜனாதிபதி செயலகம் மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் என்பவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கையின் சுதந்திரம் மற்றும் இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த 'எல்ல ஒடிஸி' சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டது.

அழகிய மலைநாட்டைக் கண்டுகளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பயணம் ஜூலை 01 முதல் 03ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது.

காலனித்துவ காலத்தை நினைவுகூரும் விசேட ரயிலான வைஸ்ரொயிஸ் விசேட ரயிலில் (Viceroy Special) தூதுக்குழுவினர் பயணம் செய்தனர். இராஜதந்திரக் குழுவினர் கண்டியிலிருந்து நுவரெலியா வரை குளிர் மலைப்பகுதிக்கு பயணித்ததோடு, இலங்கையின் அழகையும் விருந்தோம்பலையும் அனுபவித்து, பல்வகைமை நிறைந்த நக்கிள்ஸ் மலைத்தொடர் மற்றும் இலங்கையின் உயரமான ரயில் நிலையமான பட்டிபொலவையும் பசுமையான மற்றும் மூடுபனியுடனான மலைகளிடையே மறைந்திருக்கும் புதுமைகளையும் கண்டுகளித்தவாறு சென்றனர். ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்ட ரயில் சமிக்ஞை செயல்முறை மற்றும் நமது நாட்டின் ரயில்சேவையில் இன்னும் பின்பற்றப்படும் சமிக்ஞை டெப்லெட் முறையைப் பார்க்கும் வாய்ப்பும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும், இந்த புகையிரதப் பாதையில் பயணிக்கும்போது காணக்கூடிய 20ஆம் நூற்றாண்டின் அற்புதமான நிர்மாணமான எல்ல ஒன்பது வளைவுகள் பாலம் மற்றும்







தெமோதர புகையிரத வளைவு ஆகியவற்றை வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு பார்வையிடும் வாய்ப்பும் கிடைத்தது. காலனித்துவ வரலாற்றிலும் பெருமையிலும் ஊறிப்போன தேசிய மரபுரிமைச் சின்னமாகிய நுவரெலிய கிராண்ட் ஹோட்டலுக்குச் சென்று வெளிநாட்டவர்களிடையே பிரபலமான இலங்கை விருந்தோம்பலை அனுபவிக்கவும், பேத்ரோ தேயிலைத் தோட்டத்தில் உலகப் புகழ்பெற்ற 'சிலோன் டீ' தேநீரை சுவைக்கவும் அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

நுவரெலியா ஜனாதிபதி இல்லத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்திக்கும் வாய்ப்பும் தூதுவர்களுக்குக் கிடைத்தது.

இந்த விசேட சுற்றுப் பயணத்திற்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் என்பன அனுசரணை வழங்கியிருந்தன.




# இன்றைய நாளில்...

- ✱ 1865 – ஆபிரகாம் லிங்கன் கொலை தொடர்பான நால்வர் தூக்கிலிடப்பட்டனர்.
- ✱ 1896 – இந்தியாவில் முதல் தடவையாக மும்பையில் திரைப்படம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✱ 1915 – 1915 சிங்களவர் - முஸ்லிம்கள் கலவரம்: இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டிவிட்டார் என்ற குற்றச்சாட்டில் என்றி பெதிரிஸ் என்ற இராணுவ அலுவலர் கொழும்பில் தூக்கிலிடப்பட்டார்.
- ✱ 1937 – பலஸ்தீனத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் முதல் தடவையாகப் பரிந்துரைக்கப்பட்டது.
- ✱ 1953 – சே குவேரா பொலிவியா, பெரு, எக்குவடோர், பனாமா, கோஸ்ட்டா ரிக்கா, நிகராகுவா, ஹொண்டுராஸ், எல் சால்வடோர் ஆகிய நாடுகளுக்கான பயணங்களை ஆரம்பித்தார்.
- ✱ 1959 – வெள்ளிக் கிரகம் 'ரேகுளுஸ்' விண்மீனை மறைத்தது. இந்நிகழ்வு வெள்ளியின் விட்டம் மற்றும் அதன் வளிமண்டலம் போன்றவற்றை அளக்க உதவியது.
- ✱ 1980 – ஈரானில் இஸ்லாமியச் சட்ட முறைமை நடைமுறைக்கு வந்தது.
- ✱ 2003 – நாசாவின் 'ஒப்பர்சூனிட்டி' தளவுளவி விண்ணுக்கு ஏவப்பட்டது.
- ✱ 2007 – புதிய ஏழு உலக அதிசயங்கள் பட்டியல் வெளியிடப்பட்டது. இந்தியாவின் தாஜ் மஹால் புதிய 7 உலக அதிசயங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

# மக்கள் பணத்தை யானை விழுங்கிய கதை போல கடன் மறுசீரமைப்பில் EPF, ETF பணம் திருட்டு

## உதயகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



ஆ.ரமேஸ்

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியப் பணத்தை யானை விழுங்கியது என்ற குற்றச்சாட்டுப்போலத் தான் கடன் மறுசீரமைப்பில் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியப் பணம் திருடப்பட்டுள்ள குற்றச்சாட்டும் காணப்படுகிறது.

நாட்டிலுள்ள பல லட்சம் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியப் பணத்தில் கை வைத்துவிட்டு ஒன்றிணைந்து செயற்பட வருமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுப்பது மிகவும் வேடிக்கையான – கேவலமான விடயம் எனத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடானது திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற பின்னர் அதனைக் கண்டுபிடிக்க வந்தவர்களையும் திருட்டுக் கும்பலில் சேர்ந்து பங்காளியாகுமாறு' அழைப்பதற்குச் சமன் என மயில்வாகனம் உதயகுமார் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் காட்டமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் இதுபற்றிக் குறிப்பிடுகையில், ஊழியர் சேமலாப நிதியத்தின் நோக்கமானது பணியாளரின் ஓய்வூதியக் கட்டத்தில் நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பணியாளரின் பங்கிற்கு வெகுமதி அளிப்பதுமாகும். ஆனால், அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் காரணமாக கடன் கழிப்பு செய்யப்பட்டு கடன் வழங்கிய நிறுவனங்கள் பாதிக்கப்படும். அப்படிப் பார்க்கையில் இங்கையின் மொத்த உள்நாட்டுக் கடன் 12,000 பில்லியன்களாகும். (US $ 42.1 B) . இதில் 27 சதவீத கடன் ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்தே பெறப்பட்டுள்ளது.

ஆகவே, கடன் மறுசீரமைப்புத் திட்டத்தில் நிச்சயமாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பாரிய இழப்பு ஏற்படும் என்பது தெளிவாகிறது. குறிப்பாக, 25 இலட்சம் ஊழியர் சேமலாப நிதி பங்குதாரர்கள் தங்களுக்கு கிடைக்கவேண்டிய வட்டி விகிதத்தை இழப்பர். அரசாங்கம் 2025 க்குப் பின்னர் அவர்களுக்கு 9 சதவிகித வட்டி மட்டுமே வழங்குவதாகக் கூறுகிறது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டினால் எதிர்வரும் 2038ஆம் ஆண்டுக்குள் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து (12 ட்ரில்லியன்) 12 இலட்சம் கோடி ரூபாவை இழக்க நேரிடும்.அதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படியே வழங்க முற்பட்டாலும் குறைந்தது 12 சதவிகிதமாக இருக்க வேண்டும். அதற்குத் தேவையான சட்ட திருத்தம் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசாங்கம் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செய்வதற்கு நாட்டின் செல்வந்தர்களை விட்டுவிட்டு நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ்பட்ட அப்பாவித் தொழிலாளர்களின் இறுதி மூச்சாகக் கருதப்படும் ஊழியர் சேமலாப நிதியில் கை வைத்துள்ளது. சரியாயின் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியப் பணத்தில் கை வைப்பதற்கு முன்னர் அந்த நிதிக்கு உரிமையாளர்களான தொழிலாளர்களிடம் அரசாங்கம் அனுமதி கோரியிருக்க வேண்டும். ஒருவரின் வைப்பு பணத்தில் அவரைக் கேட்காது - அவருக்கு தெரியாமல் கைவைப்பது 'திருட்டுச் செயல்' அன்றி வேறு என்ன?

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தினுடனான ஒப்பந்தத்தின்போது உள்நாட்டுக் கடன் மறுசீரமைக்கப்படாது எனக் கூறியது. பின்பு உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின்போது ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு பாதிப்பு ஏற்படாது என்றும் பின்பு கடன் மறுசீரமைப்பில் அனைத்து தரப்பினரும் சமமாக உள்ளடக்கப்படுவர் எனவும் கூறப்பட்ட நிலையில், தற்போது அனைத்து சுமையையும் EPF, ETF தலையில் ஏற்றியுள்ளது.

எனவேதான் இந்த அரசாங்கம் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியப் பணத்தைத் திருடியுள்ளது என்றே நாம் குற்றச்சாட்டை முன்வைக்கிறோம். ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியப் பணத்தை யானை விழுங்கியது என்ற குற்றச்சாட்டு போலத் தான் கடன் மறுசீரமைப்பில் EPF, ETF பணம் திருடப்பட்டுள்ள குற்றச்சாட்டும் காணப்படுகிறது.

எனவே, அன்று எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் இன்று அதற்கு கையுயர்த்தி ஆதரித்துள்ளதன் மர்மம் தான் என்ன?

ஆகவே, திருட்டுக் கும்பல்கள் ஒன்றுசேர்ந்து ஒரு பாரிய திருட்டைச் செய்துவிட்டு - அதற்கு ஆதரவும் வழங்கி விட்டு எங்களையும் திருட்டுக் கும்பலில் சேருமாறு அழைப்பது கேவலமான செயலாகும். இதற்கு ஒருபோதும் நாம் இணங்க மாட்டோம் - என பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் குறிப்பிட்டுள்ளார்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

# கடும் மழையுடன் கூடிய காற்றால் நுவரெலியா மக்கள் பெரும் பாதிப்பு

## அரச உதவி வேண்டுமெனக் கோரிக்கை

ஆ.ரமேஸ்

நுவரெலியா மாவட்டத்தில் கடும் மழையுடன் கூடிய காற்று தொடர்ந்து வீசுவதால் அங்குள்ள மக்கள் தமது இயல்பு வாழ்க்கையைக் கொண்டுசெல்ல முடியாமல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பெரும் அங்கலாய்ப்புடன் செய்வதறியாது அரசாங்கத்தின் உதவியைக் கோரி நிற்கின்றார்கள்.

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை மாற்றத்தினால் கடும் காற்று மற்றும் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக நாளுக்கு நாள் இம்மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், குடும்ப வருமானத்திற்காக அன்றாட கூலி வேலைகள் நிமித்தம் உழைத்து வாழும் மக்கள் தொழிலுக்குச் செல்ல முடியாது சொல்லொனா துயரங்களுக்கு ஆளாகியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

நுவரெலியா,தலவாக்கலை,அக்கரப்பத்தனை,நானுஓயா, கந்தப்பளை, மீப்பிளிமான, அம்புகளை, பட்டிப்பொல,இராகலை உள்ளிட்ட மேலும் பல பிரதேசங்களில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள மக்கள் மரக்கறி பயிர்ச்செய்கை மற்றும் விவசாயத் தோட்டத்தொழிலை நம்பியே வாழ்கின்றனர்; தமது அன்றாட ஜீவனோபாயத்தை மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில், தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ள விவசாயத் தொழில் நடவடிக்கைகளினால் பெரும்பாலானோர் தமது வாழ்வாதாரத்தை முற்றாகவே இழந்து தவிக்கின்றனர். அதேபோல பெருந்தோட்டங்களிலும் தோட்டத் தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது.

கடும் காற்று மற்றும் பலத்த மழை காரணமாக மரங்கள் முறிவு, மண்சரிவு, கடும் குளிர், போக்குவரத்துப் பாதிப்பு, மின்சாரத் தடை மற்றும் வெவ்வேறு அனர்த்தங்கள் போன்றவற்றால் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்துள்ள இம்மக்கள் தொழில் இழந்து வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க, வாழ்வாதார பாதிப்புகளை இக்கால சூழ்நிலையில் எதிர்கொள்ளும் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# சமன்புர கொலனியில் மரம் முறிந்து வீழ்ந்ததில் பகுதியளவில் குடியிருப்பு சேதம்

## அதிகாரிகளின் அசட்டையீனத்தால் மக்கள் கவலை

தலவாக்கலை நிருபர்

தலவாக்கலை, வட்டகொட சமன்புற பிரதேசத்தில் நேற்று முன்தினம் (05) மாலை வீசிய பலத்த காற்றினால் மரமொன்று முறிந்து வீழ்ந்தமையால் குடியிருப்பொன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது. வட்டகொட சமன்புற கிராமத்தில் பலமடங்கு உயர்ந்துள்ள மரங்கள் வீடுகளுக்கு மேல் காணப்படுகின்றன. இதனையிட்டு பொதுமக்கள் பலர் முறைபாடுகளைச் செய்துள்ளபோதிலும் அதனை முற்றாக வெட்டி அகற்றும் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்டுகொள்ளவுமில்லை; வெட்டியகற்ற நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவுமில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதேவேளை, காற்றின் காரணமாக தலவாக்கலை - பூண்டுலோயா பிரதான வீதியில் அமைந்துள்ள ஒலிரூட் பகுதியில் பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் அவ்வழிப் போக்குவரத்து தடைப்பட்டது. தலவாக்கலை பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்தே மரத்தை வெட்டி அகற்ற நடவடிக்கை எடுத்தனர்.

# யாழ். பல்கலைக்குத் தெரிவாகும் துணைவேந்தர் தமிழ்ப் பாரம்பரியங்களைப் பாதுகாக்க வேண்டும்

## அங்கஜன் எம்.பி. கோரிக்கை

யாழ். நிருபர்

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருக்கான தெரிவு இடம்பெறவுள்ள நிலையில், துணைவேந்தராக வருபவர் பல்கலைக்கழக மற்றும் தமிழ் பாரம்பரியங்களை பாதுகாப்பவராக செயற்பட வேண்டும் - என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கோரியுள்ளார்.

இது தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தனிச் சிறப்புள்ளது. அதாவது, பரமேஸ்வராக் கல்லூரியை தானமாக வழங்கி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை உருவாக்கினார்கள்.

ஒரு கல்விக் கூடத்துக்காக ஒரு கல்விக் கூடத்தைத் தானம் கொடுத்து உருவாக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்களாக இருந்த பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் வித்தியானந்தன் மற்றும் பேராசிரியர் துரைராஜா போன்றவர்கள் எமது சமூகத்திற்கு அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில், எதிர்வரும் 12ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கான துணைவேந்தர் தெரிவு இடம்பெறவுள்ள நிலையில், துணைவேந்தராகத் தெரிவுசெய்யப்படுபவர் எமது வரலாறுகளை தாங்கிச் செல்பவர்களாக இருக்க வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பிரிவுக்காக நால்வர் போட்டியிடுகின்ற நிலையில், புள்ளி அடிப்படையில் தெரிவுசெய்யப் படும் மூவரின் பெயர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்படும்.

ஜனாதிபதி, தான் விரும்புகின்ற ஒருவரை துணைவேந்தராகத் தெரிவுசெய்யும் பொறுப்புள்ள



நிலையில் தெரிவு அரசியல் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான தெரிவாக அமையக் கூடாது. ஆகவே, நான் இந்தக் கருத்தை அரசியல்வாதி என்ற நிலையில் பதிவுசெய்யாமல் நானும் ஒரு குடிமகன் என்ற ரீதியில் எமது மரபுகள் - சம்பிரதாயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ரீதியில் பதிவுசெய்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# நயினாதீவு நாகதீப ரஜமகா விகாராதிபதிக்கு கௌரவம்



யாழ்ப்பாணம் - நயினாதீவு நாகதீப ரஜ மகா விகாரையின் விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் நயினாதீவுக்கு வந்து 50 ஆவது ஆண்டு நிறைவடைந்தமையை முன்னிட்டு சர்வமதங்களின் பங்கேற்புடன் அவர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

நயினாதீவு மேகலை அரங்கத்தில் நேற்று புதன்கிழமை(05) காலை 9 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கையின் நான்கு பிரதான பௌத்த பீடங்களின் தேரர்கள், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய பிரதம குரு உள்ளிட்ட சர்வமதத் தலைவர்களின் பங்கேற்புடன் நாகதீப ரஜ மகா விகாரை விகாராதிபதி தவில், நாதஸ்வர இசையுடனும் கண்டிய நடனத்துடனும் விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டார்.

அதன்போது வீதியில் இரு மருங்கிலும் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கூடி, விகாராதிபதிக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நயினாதீவு மண்ணில் சேவை புரிய தனது 11ஆவது வயதில் தடம் பதித்த நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் 50 வருடங்களாக நயினை மண்ணுக்கும் மக்களுக்கும் ஆற்றிவரும் பெரும் சேவையை முன்னிட்டு கௌரவிக்கும் முகமாகவே நயினாதீவு மக்களால் குறித்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# வடக்கில் பதிவுசெய்யப்படாத தனியார் சுகாதார சேவைத் துறையினரை பதிவுசெய்ய அறிவுறுத்தல்



தனியார் சுகாதாரத் சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபைக் கூட்டம் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபைச் செயலாளர் வைத்திய கலாநிதி டிலீப் லியனகேயின் பங்களிப்புடன் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபை சார்ந்த பூரண விளக்கங்களும் அளிக்கப் பட்டன.

இக்கூட்டத்துக்கு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள், வைத்தியசாலைப் பொறுப்பு வைத்தியர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வட மாகாணத்திலுள்ள தனியார் வைத்திய துறையினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

பொதுமக்களுக்கான பாதுகாப்பான தரமான வைத்திய சேவையானது தனியார் துறையிடமிருந்து கிடைக்கப்பெறுவதை மேற்பார்வை செய்யும் முகமாக அனைத்து மருத்துவத்துறை சார்ந்த தனியார் நிறுவனங்களும் தனியார் சுகாதாரத் சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபையில் பதிவுசெய்யப்பட வேண்டியதன் அவசியம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மேற்படி பதிவுகளை (www.phsrc.lk) இணையதளத்தினூடாக (online) மேற்கொள்ள முடியும்.வடமாகாணத்தில் தனியார் சுகாதார சேவைகளை ஒழுங்குபடுத்தும் சபையில் பதிவு செய்யப்படாத ஒருசில நிறுவனங்கள் உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# தேசிய சமாதானப் பேரவையால் முன்னெடுக்கப்படும் மத சகவாழ்வு தொடர்பில் தெளிவூட்டும் செயலமர்வு



மன்னார் நகர் நிருபர்

தேசிய சமாதானப் பேரவையால் முன்னெடுக்கப்பட்டுவரும் மத சகவாழ்வுக்கான முன்னெடுப்பு செயற்றிட்டத்தின் கீழ் பிரதேச சர்வ சமயக் குழுக்களுக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தெளிவூட்டும் செயலமர்வு தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

தொடர்பாடலுக்கான பயிற்சி மையத்தின் ஒழுங்கமைப்பில் அதன் மாவட்ட இணைப்பாளர் ஜசோதரன் தலைமையில் மாவட்ட ரீதியாக இயங்கிவரும் சர்வ சமய குழுவினர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் தேசிய சமாதானப் பேரவையின் இணைப்பாளர் உவைஸ் ஊடாக குறித்த தெளிவூட்டும் செயலமர்வு இடம்பெற்றது.

சமய சகவாழ்வு உட்பட மன்னார் மாவட்டத்தில் மத ரீதியாகக் காணப்படும் பிரச்சினை தொடர்பில் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் மத ரீதியான திறந்த கலந்துரையாடல் கட்டமைப்பை உருவாக்கவேண்டிய அவசியம் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் குறித்த செயலமர்வில் தெளிவூட்டல்கள் இடம்பெற்றன.

குறித்த செயலமர்வில் நான்கு மதத் தலைவர்கள், ஊடகவியளாலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உத்தியோகத்தர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.


தேசிய லொத்தர் சபை National Lotteries Board
புதன்கிழமை 2023.07.05
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5166
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,000,000.00
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 3 3 8 7 0 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3408
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,014,888.00
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 33 50 76 77

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1621
லக்கி 7 சூப்பர் பரிசு 2023.07.14 அன்று எடுக்கப்படும் ரூ. 13,251,889.52
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 8 0 6 6 0 0

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1196
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,105,200.80
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 02 15 57 67

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 475
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,618,204.20
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 21 34 35 48
விசேட இலக்கினம் மேஷம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1514
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 400,000,000.00
ஆங்கில எழுத்து P
சுப்பர் இலக்கம் 21
வெற்றி இலக்கங்கள் 28 38 44 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# பாக்குநீரிணையை நீந்திக்கடந்த மதுஷிகனுக்கு 231ஆவது படைப்பிரிவினால் கௌரவம்



கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவரும் ஜனாதிபதி விருது பெற்ற சிரேஷ்ட சாரணருமான தவேந்திரன் மதுஷிகன் இளம் வயதில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்தமையை முன்னிட்டு 231ஆவது இராணுவப் படைப்பிரிவினால் கௌரவமளிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (04) மட்டக்களப்பில் இடம்பெற்றது.

231ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் கொமாண்டர் திலீப் பண்டார தலைமையில் 231ஆவது இராணுவப் படைப்பிரிவின் கல்லடி இராணுவ முகாமில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா கலந்து கொண்டிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமான்ன, மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், மட்டக்களப்பு பாடுமீன் கழகத்தின் தலைவர் புஸ்பாகரன், புனித மிக்கேல் கல்லூரியின் அதிபர் எம்.பிரபாகரன், மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் வீ.பிரதீபன், மதுஷிகனின் பெற்றோர், மாவட்ட ஊடகப் பொறுப்பதிகாரி வ.ஜீவானந்தன், இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட சாரண ஆசிரியர்கள், சாரண மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது இந்தியாவின் தனுஷ்கோடியிலிருந்து பாக்கு நீரிணையை நீந்தி இலங்கையின் தலைமன்னாரை வந்தடைந்ததுடன், பிளாஸ்ரிக் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்திய சாதனையாளரான மதுஷிகன் பாராட்டப்பட்டதுடன், அதிதிகளினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அத்தோடு குறித்த மாணவனின் சாதனையைப் பாராட்டி, மட்டக்களப்பு பாடுமீன் கழகத்தின்



தலைவர் புஸ்பாகரனினால் பணப்பரிசில் வழங்கப்பட்டதுடன், இவர் தனது சாதனை நீச்சல் பயணத்தில் 30 கிலோ மீற்றர் தூரமுடைய பாக்கு நீரிணையை சுமார் 12 மணித்தியாலம் 58 நிமிடங்களில் நீந்திக் கரை சேர்ந்ததுடன், இதுவரை நீச்சல் திறமைக்காக 12 பதக்கங்களை வென்றெடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தில் கணிதத்துறையில் தமது பாடசாலைக் கல்வியை கற்றதுடன், இலங்கை சாரணியப் படையில் இணைந்து தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



மட்டக்களப்பு, குருக்கள்மடம் அருள்மிகு ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் ஞாயிற்றுக்கிழமை(28) இடம்பெற்றது. இதன்போது நூற்றுக்கணக்கான அடியவர்களின் அரோகரா கோஷங்களுடன் சிவாச்சாரியார்களினால் மந்திரங்கள் முழங்க பெருந்திரளான பக்தர்களின் பங்குபற்றலுடன் கும்பாபிஷேக நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.
**படப்பிடிப்பு:** குருக்கள்மடம் செய்தியாளர்




அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்தி தொழில் முயற்சியாளர்களுக்கான அறிவூட்டும் நிகழ்வு வியாழக்கிழமை (06) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அட்டாளைச்சேனை வங்கி வலய முகாமையாளர் ஐ.யூ.நபீஸா தலைமையில் இடம்பெற்றது. இதில் திட்ட முகாமையாளர் எஸ்.எல்.அஸீஸ் வளவாளராகக் கலந்துகொண்டதுடன் தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட், வங்கிச்சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் ரீ.பரமானந்தம் மற்றும் கருத்திட்ட உத்தியோகத்தர் எம்.எவ்.நவாஸ், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஸபான, வலய உதவி முகாமையாளர் எம்.எஸ்.அப்துல்லாஹ் உட்பட சமுர்த்தி கள உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.
**படப்பிடிப்பு:** திராய்க்கேணி செய்தியாளர்

# ஸ்ரீராமபக்த பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தான கும்பாபிஷேக நிகழ்வு

ஆலையடிவேம்பு செய்தியாளர்

அக்கரைப்பற்று வாச்சிக்குடா திருவருள்மிகு ஸ்ரீராமபக்த பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தான புனராவர்த்தன நவகுண்டபக்ஷ அஷ்டபந்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

05ஆம் திகதி புதன்கிழமை கருமாரம்ப கிரியைகளோடு ஆரம்பமான கும்பாபிஷேக கிரியைகள் 06ஆம் திகதி இடம்பெற்ற குருபூஜை உள்ளிட்ட வழிபாடுகளுடனும் இன்று 07ஆம் திகதி காலை முதல் 08ஆம் திகதி பிற்பகல் 04 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்று 09ஆம் திகதி காலை 8.42 மணிமுதல் 10.20 மணிவரையுள்ள சுபநேரத்தில் கும்பாபிஷேக குடமுழுக்கு பெரும்சாந்தி இடம்பெறவுள்ளது.



# பாடசாலை கீதப்போட்டியில் பட்டிருப்பு ம.ம.வி. முதலிடம்



நிந்தவூர் செய்தியாளர்

களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு வலயத்துக்குட்பட்ட 1AB பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பாடசாலை கீதப்போட்டியில் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

வெற்றிபெற்ற மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களான திருமதி ரவிதா சசிகுமார், திருமதி சந்திரலதா மதியழகன் ஆகியோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.சபேஸ்குமார் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இப்போட்டியில் செட்டிப்பாளையம் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் களுதாவளை மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.



மீன்பிடித்துறை அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் வியாழக்கிழமை(06) நடைபெற்றது. இதன்போது மூதூர் மற்றும் தோப்பூர் பிரதேசத்தில் மீனவர் இறங்குதுறை அமைப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகள் ஆரம்பித்திருந்தும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி காரணமாக இடைநிறுத்தப்பட்ட திட்டங்களை மீள அமுல்படுத்துமாறு திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளித்த மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 2024இல் இத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.
**படப்பிடிப்பு:** மாளிகைக்காடு செய்தியாளர்



2022ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் காட்டு யானைகளின் தாக்கத்தினால் சொத்தழிவுக்குள்ளான காரைதீவு-10 மற்றும் காரைதீவு-11 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் 06 பயனாளிகளுக்கான நஷ்டஈடு கொடுப்பனவுக்கான ரூ.217,000.00 இற்கான காசோலைகள் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜனால் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் ஆகியோர்களும் கலந்துகொண்டனர்.
**படப்பிடிப்பு:** மாளிகைக்காடு செய்தியாளர்



இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச்.ஏ.முனாஸ், பல்கலைக்கழகத்தின் அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அக்கரைப்பற்றைச் சேர்ந்த இவர், தனது கடமையை பல்கலைக்கழகத்தில் வைத்து அண்மையில் பொறுப்பேற்றுக்கொண்டார்.
**படப்பிடிப்பு:** மீரா நகர் செய்தியாளர்



திருகோணமலை, கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட கந்தளாய் ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்துக்கு மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான சிசிரிவி கெமரா, அதற்குரிய உபகரணங்கள் மற்றும் கூலர் ஆகியன புதன்கிழமை(05) கையளிக்கப்பட்டன. இப்பாடசாலையில் மிக நீண்ட காலமாகக் காணப்பட்ட குறைபாட்டை தனவந்தர் எம்.ஐ.எம்.முபாரிஸ் என்பவரின் சொந்த நிதியில் பாடசாலை அதிபர் எஸ்.சாகிதீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின்போது கையளிக்கப்பட்டது. இதன்போது பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.
**படப்பிடிப்பு:** கந்தளாய் செய்தியாளர்

# வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு

மாளிகைக்காடு செய்தியாளர்

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் 2023ஆம் ஆண்டுக்கான சௌபாக்கியா வீடமைப்புத் திட்டத்தின் கீழ் பிரதேச செயலக சமூக அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்குட்பட்ட 06 வீடுகளுக்கான அடிக்கல் நடும் ஆரம்ப நிகழ்வு புதன்கிழமை(05) நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபரின் நெறிப்படுத்தலிலும் சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம் தலைமையிலும் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், அதிதிகளாக சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.ஹிதாயா,



கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம்.பவாஸ், பிரிவுக்கான கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட சமுர்த்தி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



கல்முனை யங் பேர்ட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பின் தேவையாக இருந்த வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கான ஆரம்பகட்ட நிதியை 'கல்ப் பெடெறேசன் கல்முனை' அமைப்பின் ஊடாக அதன் பிரதிநிதி எஸ்.எல்.பைறூஸினால் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது. அமைப்பின் தலைவர் முஹம்மட் மர்சூக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி அதிதியாகக் கலந்துகொண்டிருந்தார்.
**படப்பிடிப்பு:** அட்டப்பள்ளம் செய்தியாளர்



# இறக்குவானை பரியோவான் தமிழ் தேசிய கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான கிரிக்கெட் போட்டி




இறக்குவானை பரியோவான் தமிழ் தேசிய கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி 2006ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஏற்பாட்டில் ஜூலை 1,2,3 ஆகிய திகதிகளில் இறக்குவானை பொதுமைதானத்தில் அதிபர் பூபாலபிள்ளை கமலேஸ்வரன் தலைமையில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. கல்லூரியின் 136ஆவது அகவை நிறைவை முன்னிட்டு பேரணியொன்றும் முன்னெடுக்கப்பட்டது. பாடசாலையின் அதிபர், முன்னாள் அதிபர்கள், முன்னாள் ஆசிரியர்கள், தற்போதைய ஆசிரியர்கள், நிகழ்வுக்கு பங்களித்த இளம் தலைமுறையினர் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். இந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 2019ஆம் ஆண்டு சாதாரண தர மாணவர்கள் கிண்ணத்தை கைப்பற்றியதுடன் 1998ஆம் ஆண்டு சாதாரண தர மாணவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர். தொடரின் நாயகனாக மைக்கல் எண்டனி (1998), சிறந்த துடுப்பாட்ட வீரராக ஆறுமுகம் மிதுன் அபிஷேக் (2019), சிறந்த பந்துவீச்சாளராக யோகேஸ்வரன் தனுஜன் (2019) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

**படப்பிடிப்பு:** மனோகரன் சுரேந்திரன், நவராஜா பிரபாஷன்

# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதி கூட்டுத்தாபன முறைகேடுகள் அம்பலம்

## நிதியமைச்சின் உதவிச் செயலாளர் கோப் குழுவுக்குப் பாராட்டு





அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் வெளிக்கொணரப்பட்டமையால் குறித்த முறைகேடுகளை சீர்செய்து நிறுவனத்தை முன்னேற்ற முடிந்திருப்பதாகத் தெரிவித்து கோப் குழுவுக்கு நிதியமைச்சின் உதவிச் செயலாளர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் கடந்த மார்ச் 07ஆம் திகதி இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாப னத்துக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் மதிப்பாய்வு செய்யும் நோக்கில் குறித்த குழு அண்மையில் (04) அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் கூடியபோதே இவ்வாறு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

கோப் குழுவின் அறிவுறுத்தலுக்கமைய இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாப னத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை பரிசீலித்ததாகவும், இதுவரையில் நிறுவனம் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் கோப் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

### பணியாளர்களை இணைத்துக் கொள்வதை ஒழுங்குமுறைப்படுத்தல்

பணியாட் தொகுதிக்கு ஆட்களை இணைத்துக் கொள்வதை ஒழுங்குமுறைப்படுத்துவது தொடர்பில் திறைசேரியின் பிரதிச் செயலாளர் தெரிவிக்கையில், கோப் குழுவினால் வழங்கப் பட்ட பரிந்துரையை நடைமுறைப்படுத்து வதற்கு ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நிறுவனத்தின் பணியாட் தொகுதியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், பணியாளர்களை இணைத்துக்கொள்வதற்கு முகாமைத்துவ சேவையின் வழிகாட்டலைப் பின்பற்றி வருவதாகவும் குறிப்பிட்டார்.

நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக் கப்படுவதைத் துரிதப்படுத்துவதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இந்நிறுவனத்தின் கூட்டுத் திட்டம் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டிருப் பதாகவும் பொதுத்துறை நிறுவனங்கள் திணைக் களத்தின் இணக்கப்பாட்டுக்கமைய இதனை செயற்படுத்த முடியுமென்றும் வலியுறுத்தப்பட் டது.

தற்போது நடைமுறையில் உள்ள கூட்டுத் திட்டத்தில் உள்ள வணிக நோக்கங்களை அடைவதற்கான உத்திகள் குறித்து கோப் குழுவின் தலைவர் கேட்டறிந்தார். நிறுவனத் தின் வணிக நோக்கங்களை அடைவதற்கான மூலோபாயத் திட்டம் தற்போது தயாரிக்கப் பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க் கப்படுவதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

நிறுவனத்தில் நடந்த முறைகேடுகள் தொடர்பில் குழுவின் பரிந்துரைக்கமைய முதற்கட்ட விசாரணை நடத்தப்பட்டு இடைக்கால அறிக்கை கோப் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, நிறுவனத்தில் நடந்த பல முறைகேடுகளுக்கு காரணமான பொதுமுகாமை யாளர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

ஆய்வறிக்கை குறித்து கருத்துத் தெரிவித்த அதிகாரிகள், 2006ஆம் ஆண்டு முதல் பணிபு ரியும் தற்போதைய பொது முகாமையாள ரின் நடவடிக்கையால் பல நிர்வாக சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி, முறைகேடான ஆட்சேர்ப்பு, ஆவணங்கள் பதிவு நடைமுறைப்ப டுத்தாமை, அதிகாரிகளுக்கான கடமைப் பட்டி யல்கள், அதிகாரிகளை சமமற்ற முறையில் நடத்துதல், நிறுவனத்தின் நலனைத் துண்டித்தல், நிறுவனத்தின் செயற்பாடுகளில் தொடர்ச்சியான குறைவு உள்ளிட்ட பல முறைகேடுகளை அறிக்கை வெளிப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டனர்.

இங்கு நடத்தப்பட்ட விசாரணை போதுமானதாக இல்லாததால், நிறுவனத்தில் நடந்துள்ள கொடுக்கல் வாங்கல்கள் குறித்து தடயவியல் கணக்காய்வு அல்லது ஆழமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று கோப் குழு உறுப்பினர்கள் அறிவுறுத்தினர். இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது 06 மாதங்களின் பின்னர் நிறுவனத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக மீண்டும் அழைக்கப்படுமெனவும் தலைவர் தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி, நிறுவனத்தின் சில கோப்புகள் காணாமல் போனமை மற்றும் பழைய டிஜிட்டல் தரவுகள் நீக்கப்பட்டமை தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோப் குழுவின் உறுப்பினர்கள், இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்துக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரான் விக்ரமரத்ன, ஜகத் குமார சுமித்ராரச்சி, சட்டத்தரணி மதுர விதானகே, ராஜிகா விக்ரம சிங்ஹ மற்றும் அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# இந்திய கடற்றொழிலாளர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 22 இந்திய கடற்றொழிலாளர்களுள் 21 பேருக்கும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனை விதித்து ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மற்றைய கடற்றொழிலாளி 16 வயதுக்குட்பட்ட சிறுவனாகக் காணப்பட்டமையால், சிறுவனின் எதிர்காலத்தை மன்று கருத்தில் கொண்டு, அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன் வைக்காது 10 ஆயிரம் ரூபா நன்னடத்தைப் பிணையில் விடுவித்துள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டபோது கடந்த ஜூன் மாதம் 21 ஆம் திகதி இந்திய கடற்றொழிலாளர்கள் 22 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மறுநாள் நீரியல் வளத்துறை அதிகாரிகளூடாக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டமையை அடுத்து அவர்களை நேற்றுமுன்தினம் புதன்கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், குறித்த வழக்கு புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் மேற்கண்ட தீர்ப்பை வழங்கியது.

மீனவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட நான்கு படகுகளில் இரு படகுகளை அரசுடைமையாக்குமாறு உத்தரவிட்ட நீதவான், மற்றைய இரு படகுகளுக்குமான உரிமையாளர் இல்லாமையால், படகு உரிமை கோரிக்கை வழக்கு விசாரணையை செப்டெம்பர் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# மேல்குடலிகம பிரதேசத்தில் எசல பெரஹர ஊர்வலம்









இக்பால் அலி

புளத்சிங்கள, குடலிகம ஸ்ரீ ரதனசார அறநெறிப் பாடசாலை நடத்திய எசல பெரஹர ஊர்வலம் கடந்த 03 ஆம் திகதி மேல் குடலிகம சந்தியிலிருந்து ஆரம்பமாகி வெயங்கல்ல ஊடாக கிரிகொல சந்தி வரை இடம்பெற்றது.

சுமார் 30 வருடங்களின் பின்னர் இடம்பெற்ற இவ் ஊர்வலத்தில் குடலிகம ஸ்ரீ கேஷ்ட்ரராம விகாராதிபதி தியக்காடுவே சரணசிறி தேரர், மேல் கூடலிகம ஸ்ரீ அபிநவராம விகாரையின் விகாராதிபதி தினுலந்தவத்தை விமல தேரர், நெபட சுமனானந்த தேரர் ஹலெம்பா அமிதவங்ச தேரர், அகலவத்தை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஜானக ஜயசிங்க, புளத்சிங்கள பிரதேச செயலாளர் பிரசாத் ரங்கன பெரேரா மற்றும் அரச அதிகாரிகள் பங்கேற்றனர்.

# உயர்ஸ்தானிகரால் பாகிஸ்தானின் நூலகம் கண்டியில் அங்குரார்ப்பணம்







இக்பால் அலி

இலங்கைக்கான பாகிஸ்தான் நாட்டு உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புக்ரி நேற்றுமுன்தினம் (05) கண்டிக்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

பாகிஸ்தான் - இலங்கைக்கிடையிலான நட்புறவை வலுப்படுத்தும் வகையில் கண்டி நகரில் பொழுதைக் களிப்பதற்காக மக்கள் அதிகளவு ஒன்று கூடுகின்ற சேஸ் உயன பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறந்த பொது நூலகத்தையும் பொதுமக்கள் பாவனைக்காக அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வு கண்டி மாநகர ஆணையாளர் ஏசான் விஜயதிலக்க தலைமையில் இடம்பெற்றது. இதனையடுத்து கண்டி நகரில் முஸ்லிம் வர்த்தக சங்கத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்துக்கும் விஜயம் செய்தார். இதன்போது அங்குள்ள நிர்வாகசபை உறுப்பினர்களைச் சந்தித்து கருத்துகளைப் பகிர்ந்துகொண்ட அவர், ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தின் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பாகிஸ்தான் நாட்டு இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அப்ஸல் அஹமட் மரைக்கார், உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள், கண்டி மாநகர சபை உத்தியோகஸ்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கொழும்பு ஹம்ஸா கல்லூரியில் பாராட்டு

கனடாவிலுள்ள மிலோனாஸ் கிறிஸ் நிறுவனத்தின் அனுசரணையில் கொழும்பு ஹம்ஸா கல்லூரியின் 1987 ஆம் வருட பழைய மாணவ - மாணவிகள் ஏற்பாடு செய்துள்ள பாராட்டு விழாவும் சாதனையாளர்கள் கௌரவிப்பும் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரியின் லத்தீப் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் நளீவ் றபாய்டீன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் உழைக்கும் ஆசிரிய ஆசிரியைகள், பொதுப் பரீட்சைகளில் திறமைகளை வெளிப்படுத்தி பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவ - மாணவிகள் இதன்போது பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரிமியர் மெடிக்கல் சென்டர் உரிமையாளர் வைத்திய கலாநிதி றிஸ்வி சாலி பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார்.

# மகனின் விடுதலைக்காக 28 ஆண்டுகளாக போராடிய தாய்

## முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்வு





தமிழ் அரசியல் கைதியாக கடந்த 28 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள தனது மகனது விடுதலைக்காகப் போராடி 77 வயதில் ஏமாற்றத்தோடு இறைபதம் எய்திய விக்னேஸ்வரநாதன் வாகீஸ்வரியின் முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவரது பிள்ளைகள் , உறவினர்கள், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் மு. கோமகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு அன்னாரின் உருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த விக்கினேஸ் வரநாதன் பார்த்தீபன், தமிழ் அரசியல் கைதியாக கடந்த 28 ஆண்டுகளாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், தனது மகனின் விடுதலைக்காக கடுமையாகப் போராடி வந்த நிலையிலேயே வாகீஸ்வரி, பிள்ளையின் முகம் காணாமலே கடந்தாண்டு இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

சமூக எண்ணங்கொண்டு இம்மண்ணை நேசித்த வாகீஸ்வரி அம்மாவின் ஆத்மா உண்மையிலேயே சாந்தியடைய வேண்டுமானால், 28 ஆண்டுகளாக சிறைவைக்கப்பட்டுள்ள பார்த்தீபன் உட்பட சகல தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப் படவேண்டும் என குரலற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

# ஹஜ் கடமைக்காகச் சென்ற இலங்கையர் மூவர் மரணம்

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்காவுக்குச் சென்ற இலங்கையர்களுள் மூன்று பேர் இதுவரை உயிரிழந்துள்ளதாக முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு 14ஐச் சேர்ந்த யாத்திரிகர் ஒருவர் மதீனாவில் 4ஆம் திகதி இடம்பெற்ற விபத்தொன்றிலும் கொலன்னாவையைச் சேர்ந்த பெண் யாத்திரிகர் ஒருவர் மாரடைப்பு காரணமாக மக்காவிலும் அத்துடன், குருணாகல், பானகமுவ பகுதியைச் சேர்ந்த யாத்திரிகர் ஒருவர் கடந்த வாரம் மாரடைப்பு காரணமாக மினாவிலும் உயிரிழந்துள்ளதாக முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையிலிருந்து இம்முறை புனித ஹஜ் கடமைக்காக சுமார் 3,500 பேர் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (06.07.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 198.9074 | 211.5951 |
| கனேடியன் டொலர் | 224.2462 | 238.5989 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40.7264 | 43.9911 |
| யூரோ | 324.4139 | 343.1959 |
| ஜப்பான் யென் | 2.0732 | 2.1908 |
| சிங்கப்பூர் டொலர் | 220.5542 | 234.1048 |
| ஸ்ரேலிங் பவுன் | 380.3842 | 401.1871 |
| சுவிஸ் பிரான்ங் | 331.6802 | 353.2903 |
| ஐ.அ. டொலர் | 300.0054 | 315.1016 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 814.3059 |
| குவைட் | குவைட் தினார் | 999.0081 |
| ஓமான் | ஓமான் றியால் | 797.3952 |
| கட்டார் | கட்டார் றியால் | 84.2405 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 81.8431 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 83.5834 |





உடப்பு, செல்வபுரம் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருஷாபிஷேகமும் சங்காபிஷேகமும் புதன்கிழமை (05) இடம்பெற்றது.இந்நிகழ்வில் பெருமளவான பக்தர்கள் பங்கேற்று நாகதம்பிரானின் அருளைப் பெற்றுக்கொண்டனர்.

**படங்கள்:** உடப்பு செய்தியாளர்

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk thamilaneditor@gmail.com

# புதிய தங்கக்கடன் மத்திய நிலையத்தை நுரைச்சோலையில் திறந்து வைத்தது HNB FINANCE

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE PLC இன் 58ஆவது தங்கக்கடன் மத்திய நிலையம் கற்பிட்டி நுரைச்சோலையில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் HNB FINANCE இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், நிறுவனத்தின்



சிரேஷ்ட முகாமைத்துவ உறுப்பினர்கள் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

கற்பிட்டி மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் தங்கக்கடன் சேவைகளுக்கான தற்போதைய தேவைக்கு ஒரு தீர்வாக நிறுவனம் இந்தப் புதிய HNB FINANCE தங்கக்கடன் மத்திய நிலையத்தை அமைத்துள்ளது. வாடிக்கையாளர்களின் தேவைகளை துல்லியமாகக் கண்டறிந்து நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட Gold Loan, Gold Plan மற்றும் VIP Gold Loan சேவைகள், நிதி நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறந்த தங்கக்கடன் தீர்வுகள் என்று சந்தேகத்திற்கிடமின்றிக் கூறலாம். HNB FINANCE Gold Loan சேவையானது மூன்று நிமிடங்களில் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் ஒரு பவுண் தங்கத்திற்கான அதிக முற்பணத் தொகையைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. இந்தப் புதிய தங்கக்கடன் சேவைப் பிரிவு, சேவைக் கட்டணங்கள் அல்லது பிற மறைமுகக் கட்டணங்கள் எதுவுமின்றி அவர்கள் செல்லும் வழியில் பணம் செலுத்தும் திறனுடன் நம்பகமான பரிவர்த்தனையைத் தேடும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தீர்வாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

“நுரைச்சோலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மக்களுக்கு மிகவும் நம்பகமான தங்கக்கடன் சேவையை வழங்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். மேலும் இந்தப் புத்தம் புதிய தங்கக்கடன் மத்திய நிலையத்தின் மூலம் HNB FINANCE இன் பிற நிதிச் சேவைகளை அப்பகுதி மக்களுக்கு கொண்டு சேர்ப்பது எங்கள் ஒரே விருப்பமாகும். மேலும், ஒவ்வொரு வாடிக்கையாளரின் தேவைகளையும் துல்லியமாகக் கண்டறிந்து அவர்களுக்குத் தனித்த தங்கக்கடன் சேவையை வழங்குவது எங்கள் எதிர்பார்ப்பாகும்.” - என HNB FINANCE இன் தங்கக்கடன் சேவைகளின் தலைமை அதிகாரி லக்ஷ்மன் ரணசிங்க தெரிவித்தார்.

HNB FINANCE தங்கக்கடன் சேவையின் கீழ் செயற்படும் Gold Loan Plan சேவையானது தங்கக்கடன் துறையில் ஒரு புரட்சிகரமான சேவையாகும். மேலும் HNB FINANCE வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப வாங்கப்படும் தங்க ஆபரணங்களுக்கு கடன் தொகையை வழங்குகிறது. இந்தக் கடன் தொகையை சமமான மாதாந்திர தவணைகளில் செலுத்துவதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது. இந்த முதலீட்டுத் திட்டம், டொலருக்கு நிகரான தங்கத்தின் விலை அதிகரித்து வருவதால், நுகர்வோரின் தங்க கையிருப்பை அதிகரிக்கவும், அவர்களின் பிள்ளைகளுக்கு தங்கம் வாங்கவும் பயன்படும் சிறந்த நடவடிக்கை என்று சொல்லலாம். மேலும் HNB FINANCE அறிமுகப்படுத்திய VIP Gold Loan தங்கக்கடன் சேவையானது வணிக மற்றும் தனிப்பட்ட நிதித் தேவைகளுக்கு மிகவும் உகந்த நிதித் தீர்வாகக் கூறலாம் மற்றும் வாடிக்கையாளர்களின் தங்கப் பொருட்களுக்கான அதிகபட்ச முற்பணத் தொகையை மிக விரைவாக வழங்கவும் நிறுவனம் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்கால தரவு பகுப்பாய்வுத் திறமையை மேம்படுத்துவதற்கான மூலோபாய கூட்டுறவை உருவாக்கும் ஒக்டேவ் மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகம்

ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தரவு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வு மையமான ஒக்டேவ் இலங்கையில் உள்ள மதிப்பிற்குரிய மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையுடன் தனது கூட்டுச்செயற்பாட்டை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) தரவு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வுத் திறன்களின் வளர்ச்சியை விரைவுபடுத்தும் மற்றும் துறையில் திறமையான நிபுணர்களின் தொகுப்பை வளர்க்கும் ஒரு கூட்டுவாழ் உறவை வளர்ப்பதற்கான பரஸ்பர அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறது.

இலங்கையில் தரவு பகுப்பாய்வுகளை முன்னேற்றுவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முன்னணி நிறுவனமாக ஒக்டேவ் கல்விசார் பங்காளிகளுடன் வலுவான உறவுகளை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கிறது. குழுமத்தின் தலைவர் கிருஷான் பாலேந்திரா கூறுகையில்,

“எப்போதும் வளர்ந்துவரும் தொழில்நுட்பம் மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வு நிலப்பரப்புடன் இந்தத் துறையில் வெற்றிபெறுவதற்கான திறமையுடன் அடுத்த தலைமுறையை நாம் ஆயத்தப்படுத்துவது இன்றியமையாதது. மொரட்டுவ பல்கலைக்கழகத்துடனான கூட்டுச்செயற்பாட்டை, பல்கலைக்கழக வலையமைப்பிற்குள் இருக்கும் ஆற்றல்மிக்க திறமைக் குழுவுடன் நெருக்கமான ஒத்துழைப்பை நிறுவனமயமாக்குவதற்கான ஒரு மூலோபாய படியாகும். அத்துடன் இலங்கையில் ஒரு வலுவான மேம்பட்ட பகுப்பாய்வு சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான எங்கள் பார்வைக்கு இணங்குகிறது. ஒக்டேவ் இன் தொழிற்துறை அனுபவத்தையும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கல்விசார் தனிச்சிறப்பையும் இணைப்பதன் மூலம் இந்த இளங்கலைப் பட்டதாரிகளுக்கு வலுவூட்டவும் அவர்களின் திறமைகளை வளர்த்து அதன் மூலம் புதுமையாக்கம் செய்யவும் முடியும்.

இந்தக் கூட்டுச்செயற்பாட்டின் நிமித்தமாக ஒக்டேவ் இன் அனுபவம் வாய்ந்த நிபுணர்களுடன் இணைந்து பணிபுரியும் வாய்ப்பை மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் திறமையான மற்றும் ஆர்வமுள்ள இளங்கலைப் பட்டதாரிகளை பயிற்சியாளர்களாக ஈடுபடுத்த உதவுகிறது. தரவு அறிவியல், இயந்திர கற்றல் பொறியியல், தரவுப் பொறியியல், பி.ஐ. பொறியியல் மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வு பயன்பாட்டு வழக்குகளை வழங்குதல். கூடுதலாக பல்கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு தொழில் கண்காட்சிகளில் ஒக்டேவ் கலந்து கொள்ளுதல் தரவு பகுப்பாய்வுகளின் அற்புதமான உலகம் மற்றும் அது வைத்திருக்கும் தொழில் வாய்ப்புகள் பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளை மாணவர்களுக்கு வழங்கும்.

இதற்கிணையாக ஒக்டேவ், தரவு அறிவியல், இயந்திர கற்றல் பொறியியல் மற்றும் தரவுப் பொறியியல் ஆகிய குறிப்பிட்ட துறைகள் உட்பட தரவு பகுப்பாய்வு தொடர்பான அதன் பாடத்திட்டத்தை வலுப்படுத்த மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் நெருக்கமாகப் பணியாற்றும். தொழில்துறையின் சிறந்த நடைமுறைகள் மற்றும் வளர்ந்து வரும் சார்வுகளை இணைப்பதன் மூலம்ண வேகமாக வளர்ந்து வரும் தரவு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வு முன்னோக்கால் கோரப்படும்




சமீபத்திய அறிவு மற்றும் திறன்களை மாணவர்கள் பெற்றிருப்பதை உறுதிசெய்ய கூட்டாண்மை உதவும். ஒக்டேவ் இன் அனுபவமிக்க வல்லுநர்கள் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் மேற்கொள்ளப்படும் இறுதி ஆண்டு திட்டங்களுக்கு விருந்தினர் - விரிவுரையாளர்களாகவும் மற்றும் மேற்பார்வையாளர்களாகவும் பணியாற்றுவார்கள்.

“இந்தக் கூட்டாண்மை கொண்டுவரும் வாய்ப்புகள் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்” - என்று மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் என்.டி. குணவர்தன தெரிவித்தார். “ ஒக்டேவ் உடன் நெருக்கமாகப் பணியாற்றுவது எமது மாணவர்களுக்கு விலைமதிப்பற்ற தொழிற்றுறை வெளிப்பாட்டை வழங்குவதோடு கல்வித் துறைக்கும் தொழில்துறைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க உதவும். இலங்கையில் தரவு பகுப்பாய்வு நிலப்பரப்பின் வளர்ச்சிக்கு பங்களிப்பை ஏற்படுத்துவதற்கும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முன்முயற்சிகளை உருவாக்கவும் நாங்கள் எதிர்நோக்கியுள்ளோம்.”

ஒக்டேவ் மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கிடையிலான கூட்டுச்செயற்பாடு அடுத்த தலைமுறை தரவு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வு நிபுணர்களை வளர்ப்பதற்கும் வலுவூட்டுவதற்குமான பகிரப்பட்ட அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது. இந்தக் கூட்டாண்மையின் மூலம் இலங்கையில் ஒரு வலுவான தரவு பகுப்பாய்வு சுற்றுச்சூழல் அமைப்பின் வளர்ச்சிக்கு பங்களிப்பதனூடாக புதுமைகளை ஊக்குவித்தலையும் சமூக-பொருளாதார வளர்ச்சியில் உந்துதலையும் இரு நிறுவனங்களும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

கொழும்பு பங்குப்பரிமாற்றத்தில் இலங்கையின் பெரியளவிலான நிறுவனமாக பட்டியலிடப்பட்ட கூட்டு நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. (ஜே.கே.எச்.) 7 வகையான பரந்துபட்ட தொழில் துறைகளில் 70 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களை நடத்தும் ஜோன் கீல்ஸ் குழுமம் 2020 ஆம் ஆண்டில் வணிகத்தில் காலடி வைத்து இலங்கையின் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சிக்கு பங்களித்த 150 ஆண்டுகளைக் கொண்டாடுகிறது. 14,000 க்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்பதோடு ஜோன் கீல்ஸ் குழுமம் எல்.எம்.டி. இதழால் கடந்த 16 ஆண்டுகளாக இலங்கையின் மிகவும் மதிப்பிற்குரிய நிறுவனம் என்று பெயர் பெற்றுள்ளது. உலக பொருளாதார மன்றத்தின் முழு அங்கத்தவராக இருக்கும் அதே வேளை, ஐ.நா. குளோபல் கொம்பக்டின் அங்கத்துவத்தையும் கொண்ட ஜே.கே.எச். ஆனது ஜோன் கீல்ஸ் பவுண்டேஷன் ஊடாக “எதிர்காலத்திற்கான நாட்டைக் கட்டியெழுப்புதல்” என்ற அதன் கூட்டாண்மை சமூகப்பொறுப்பு நோக்கை நோக்கிப் பயணிக்கின்றதுடன் இலங்கையில் பிளாஸ்ரிக் மாசைக் குறைக்க ஒரு வினையூக்கியாக பிளாஸ்ரிக் சைக்கிள் ஊடாக செயற்படுகின்றது.

# இலங்கையின் மோட்டார்சைக்கிள் ஓட்டுனர்களை வலுப்படுத்துவதற்காக மேம்படுத்தப்பட்ட செயல்திறனுடன் SINOPEC X சீரிஸ் உராய்வுநீக்கி எண்ணெய் வகைகள்

மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்களின் செயல்திறனுக்கு புத்துயிரூட்டும் வாக்குறுதியுடன், Interocean Lubricants Pvt Ltd, அண்மையில் இலங்கைக்கு புதிய SINOPEC மோட்டார் சைக்கிள் உராய்வுநீக்கி எண்ணெய்களை அறிமுகப்படுத்தியது.

SINOPEC இன் இந்த அதிநவீன தொழில்நுட்ப உராய்வுநீக்கி எண்ணெய், இலங்கை முழுவதும் உள்ள மோட்டார் சைக்கிள் ஆர்வலர்களுக்கு சவாரி அனுபவத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தவுள்ளது. இறுதிநிலை மற்றும் பொதி செய்யப்பட்ட தயாரிப்புகளாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் SINOPEC X சீரிஸ் உராய்வுநீக்கி எண்ணெய் வகைகள் தரமுயர்ந்த உராய்வு நீக்கி வகைகளாகப் உலகப் புகழ்பெற்றவை.

Interocean Lubricants இன் பிரதான நிறைவேற்று அதிகாரி ஜெயசாந்த தொட்டஹேவகே அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், “Interocean Lubricants” இலங்கையில் உள்ள துடிப்புமிக்க மோட்டார் சைக்கிள் சமூகத்திற்கு புதிய SINOPEC X உராய்வுநீக்கி எண்ணெய் வகைகளை அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறது. மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்களுக்கு, அவர்களின் மோட்டார் சைக்கிள்களின் செயல்திறனை அதிகரித்து பாதை முழுவதும் மேம்படுத்திய சக்தியையும், நீடித்த தன்மையையும் வழங்கும். நிகரற்ற உராய்வுநீக்கித் தீர்வுகளை வழங்குவதே எமது நோக்கமாகும்.

இலங்கையின் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்களின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டு, சினோபெக் மோட்டார் சைக்கிள் உராய்வுநீக்கி எண்ணெய் வகைகள், சமீபத்திய JASO MA 2 & MB தரங்களுக்கேற்ப அதிவெப்ப நிலை மற்றும் கடுமையான சவாரி நிலைமைகளுக்கு எதிராக சிறந்த பாதுகாப்பை வழங்குகிறது. பெரும்பாலான ஆசிய நாடுகளைப் போலவே இலங்கையும் அதிக எண்ணிக்கையிலான மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்களைக் கொண்டுள்ளது. இலங்கைச் சந்தையில் உலர் கிளட்ச் சிஸ்டம் மற்றும் வெட் கிளட்ச் சிஸ்டம் ஆகிய இரண்டு வகை மோட்டார் சைக்கிள்கள் உள்ளன. சவாலான நிலப்பரப்புகளில் பயணம் செய்தாலும் அல்லது நீண்ட தூர பயணங்களின் போதும் ஓட்டுனர்கள் SINOPEC இன் ஆச்சரியமிக்க செயல்திறனை முழுமையாக நம்பலாம்” என்று ஜெயசாந்த தொட்டஹேவகே மேலும் தெரிவித்தார்.

Fortune Global 500 நிறுவனங்களில் 5 ஆவது இடத்தில் உள்ள சீனாவின் இரண்டாவது பெரிய எரிசக்தி நிறுவனமான Sinopec Lubricant Company 2002 இல் பீஜிங்கில் நிறுவப்பட்டது. சீனாவின் மிகப் பெரிய மசகு எண்ணெய் உற்பத்தியாளர் மற்றும் சந்தைப்படுத்துனராக, SINOPEC ஆண்டுக்கு 1.46 மில்லியன் டொன் தொகுக்கப்பட்ட உராய்வுநீக்கி எண்ணெய் உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளது. SINOPEC தயாரிப்பு வகைகளில் இயந்திர எண்ணெய்கள், கியர் எண்ணெய்கள், ஹைட்ராலிக் எண்ணெய்கள், கிரீஸ்கள்,




செயற்கைத் தொழில்நுட்ப எண்ணெய்கள், தானியங்கி பரிமாற்ற எண்ணெய்கள் மற்றும் கடல் சார்ந்த பொறிகளுக்கான எண்ணெய் (Marine Oil) போன்றவை உள்ளன. SINOPEC சீனா முழுவதும் ஐந்து பிராந்திய விற்பனை நிலையங்களுடனும், உலகம் முழுவதும் உள்ள பல துணை விற்பனை நிறுவனங்களுடனும் செயற்படுகிறது. மேலும், உராய்வுநீக்கி எண்ணெய் மற்றும் கிரீஸ் கலவைக்கான 11 உற்பத்திக் கிளைகள் சீனாவிலும், ஒரு கிளை சிங்கப்பூரிலும் நிறுவப்பட்டுள்ளது. மசகு எண்ணெய் உற்பத்தி, ஆராய்ச்சி, சேமிப்பு, போக்குவரத்து, விற்பனை மற்றும் சேவை ஆகியவற்றின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கின்ற அதன் சுயாதீன R & D நிலையங்கள் பீஜிங் மற்றும் ஷங்காயில் உள்ளன.

அவற்றின் மேம்படுத்தப்பட்ட கலவைகளுடன், SINOPEC தரம் வாய்ந்த உராய்வுநீக்கி எண்ணெய் வகையானது இயந்திர செயல்திறனை அதிகரிப்பதுடன் தேய்மானத்தை குறைத்து அதன் இயந்திர ஆயுளை நீடிக்கின்றது, இது ஓர் இதமான மற்றும் சக்திவாய்ந்த பயணத்தை உறுதி செய்கிறது. SINOPEC மோட்டார் சைக்கிள் உராய்வுநீக்கி எண்ணெய் வகைகளின் முக்கிய அம்சங்கள் மற்றும் நன்மைகள் பின்வருமாறு:

★ நிகரற்ற இயந்திர செயல்திறன் மற்றும் சக்தி

★ உராய்வு மற்றும் தேய்மானம் குறைக்கப்பட்டு எஞ்ஜின் நீடித்துழைக்கும்

★ அதிக வெப்பநிலை மற்றும் தீவிர நிலைமைகளுக்கு எதிரான உயர் பாதுகாப்பு

★ பல்வேறு மோட்டார் சைக்கிள் வகைகளில் சிறந்த செயல்திறன்

2011 ஆம் ஆண்டு முதல் Interocean Lubricants Ltd, இலங்கை மற்றும் மாலைதீவில் SINOPEC உராய்வுநீக்கிகளுக்கான தேசிய பரிந்துரையாளராக இயங்கி வருகின்றது. அண்மையில் கொழும்பில் உள்ள Shangri-la Hotel இல் நடைபெற்ற நிகழ்வின் போது, Interocean Lubricants நிறுவனம் புதிய SINOPEC மோட்டார் சைக்கிள் எண்ணெய்களை அறிமுகப்படுத்தியது. அதன் வர்த்தகர்கள் மற்றும் விநியோகத்தர்களின் முன்னிலையில் புதிய SINOPEC மோட்டார் சைக்கிள் எண்ணெய் வகைகளின் அறிமுகத்தைக் கொண்டாடியதுடன், அதில் நிறுவனத்தின் சிறந்த தயாரிப்புகளையும் புத்தாக்கங்களையும் கொண்ட அர்ப்பணிப்புள்ள மோட்டார் வாகன எண்ணெய் உற்பத்திகளைத் தொடர்ச்சியாக வழங்குவதற்கும் உறுதிபூண்டது. உயர் தரத்துடன்கூடிய செயல்திறனை வழங்கும் ஆர்வத்துடன், SINOPEC உராய்வுநீக்கி எண்ணெய் வகைகள் முன்னோக்கிப் பயணிக்கும் வாகனத் துறையின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதிநவீன தொழில்நுட்பத் தீர்வுகளைத் தொடர்ந்து வழங்கும்.

Interocean Lubricants Ltd, நாடு முழுவதும் அதன் விநியோகத்தர்கள் மற்றும் வியாபாரிகளின் வலையமைப்பின் ஊடாகச் செயற்படுகின்றது.

# பால்நிலை சமத்துவத்தை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையின் ஆடைத் துறையில் பெண்களின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் GEAR வேலைத்திட்டம்

இலங்கையின் ஆடைத்துறையானது பெண்களை வலுவூட்டுவதில் ஒரு பலம் வாய்ந்த சக்தியாக உருவெடுத்துள்ளதுடன் இத்துறையில் பெண்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பு பாராட்டத்தக்கது. இருப்பினும், பணியாளர்களில் 80% க்கும் அதிகமான பெண்கள் இருந்தாலும் மேற்பார்வை மற்றும் நிர்வாகப் பணிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவே உள்ளது. இந்த ஏற்றத்தாழ்வுக்குத் தீர்வுகாணும் வகையில் சர்வதேச நிதி நிறுவனம் (IFC) மற்றும் சர்வதேச தொழிலாளர் தாபனம்(ILO) ஆகியவை பால்நிலை சமத்துவம் மற்றும் நன்மைகள் (GEAR) திட்டத்தைத் தொடங்குவதற்கு சிறந்த வேலை முயற்சியின் கீழ் ஒன்றிணைந்தன. பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை உயர்த்தும் நோக்கில் இந்த முன்னோடித் திட்டம் 10 ஆடைத் தொழிற்சாலைகளில் செயற்படுத்தப்பட்டு 106 நபர்கள் பயனடைந்தனர்.







GEAR திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததைக் குறிக்கும் வகையில் Vogue Tex" Orit Apparels மற்றும் Hela Clothing வழங்கும் நிகழ்ச்சியின் பங்கேற்பாளர்களை அங்கீகரிக்கும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இலங்கையின் ஆடைத் தொழிலில் பெண்களை வலுவூட்டுவதற்கான ஒன்றிணைந்த சூழலை உருவாக்கி, படித்த மற்றும் புத்திசாலித்தனமான தலைமுறையை உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஒன்றிணைந்த கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம், இலங்கை முதலாளிமார் சம்மேளனம் மற்றும் முகாமைத்துவத்தில் பெண்கள் - Women in Management (இலங்கை மற்றும் மாலைதீவுகள்) ஆகியவற்றின் பிரதிநிதிகள் இதில் பங்குபற்றினர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) தூதுக்குழுவின் கூட்டுத் தலைவர் Johann Hess, இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான GEAR திட்டத்தின் முன்னேற்றம் குறித்து இக்கூட்டத்தின் போது கருத்து தெரிவிக்கையில், "இந்தக் கோட்பாடுகள் மற்றும் கொள்கைகளை பணியிடத்தில் நடைமுறைப்படுத்துவது மகிழ்ச்சியளிக்கிறது. பங்கேற்பாளர்களின் சாதனைகள் எங்கள் கூட்டு முயற்சிகளின் நேர்மறையான தாக்கத்திற்கு ஒரு சான்றாக அமைவதோடு பிரகாசமான எதிர்காலத்திற்கான நம்பிக்கையை அளிக்கிறது." - எனத் தெரிவித்தார்.

இதேவேளை, IFC இன் சிரேஷ்ட வதிவிட அதிகாரி விக்டர் அன்டனிபிள்ளை ஆடைத் துறையின் முக்கியத்துவம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், "உலகளவில் 19 மில்லியன் மக்கள் பணியாற்றும் 1.7 டிரில்லியன் அமெரிக்க டொலர் தொழில்துறையில் இவ்வளவு பெரிய திட்டத்தைத் ஆரம்பிப்பதற்கான காரணம் வெளிப்படையானது. மேலும், இலங்கையின் ஆடைத் துறையானது நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் முக்கிய பங்களிப்பாக விளங்குகிறது. IFC உலகளவில் உற்பத்தித் தொழிலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. குறிப்பாக, பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் பங்கேற்பின் அடிப்படையில் அதன் திறன்களை மேம்படுத்துவதற்கு நாங்கள் முழு மனதுடன் ஈடுபட்டுள்ளோம்." - எனத் தெரிவித்தார்.

Better Work திட்டத்தின் பிரதானி கேசவ முரளி கணபதி, விருது பெற்றவர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, "GEAR என்பது ஒரு திட்டத்தை விட மேலானது. இது எதிர்காலத்தை மாற்றும் ஒரு மாற்றத்தக்க கற்றல் பாதையாகும். இது ஆரம்பம் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும் பலவற்றை எதிர்பார்க்கிறோம். இந்தத் திட்டத்தை முடித்த சான்றிதழ் வைத்திருப்பவர்கள் இப்போது ஆடைத் துறையில் உண்மையான மாற்றத்திற்கான முகவர்களாக மாறத் தயாராக உள்ளனர். நாட்டின் மக்கள் தொகையில் 52% பெண்கள் இருந்தாலும் நிர்வாகப் பணித் துறைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாக இருப்பதால் அதை அதிகரிப்பது மிகவும் அவசியம். இந்தத் திட்டம் அதற்கு ஓர் ஊக்கியாக உள்ளது. மேலும் அவர்களின் வாழ்க்கையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தவும் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கவும் முடிந்துள்ளது." - எனத் தெரிவித்தார்.

GEAR திட்டம் ஆடைத் தொழிலாளர்களை அவர்களின் முன்னேற்றத்திற்கும் தலைமைப் பதவிகளில் வெற்றி பெறுவதற்கும் தேவையான தொழில்நுட்ப மற்றும் பிற திறன்களைக் கொண்டுள்ளது. இலக்கு - பயிற்சி அமர்வுகள் மூலம் பங்கேற்பாளர்கள் கலாசார மற்றும் நிறுவன மாற்றத்தை வளர்ப்பதற்கும் பால்நிலை சமத்துவத்தை நிவர்த்தி செய்வதற்கும் பெண்களின் திறமைகளை அடையாளம் கண்டு ஊக்குவித்து தக்கவைத்துக்கொள்வதற்கும் முகாமையாளர்களுடன் ஈடுபட்டுள்ளனர். மேலும், பணியில் இருக்கும் நடைமுறைப் பயிற்சி மற்றும் பயிற்சி அமர்வுகள் மூலம் பயிற்சியாளர்களின் நம்பிக்கையை தலைவர்களாக வளர்ப்பதில் இத்திட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. அவர்கள் தங்கள் திறமைகளை மிகவும் திறம்படப் பயன்படுத்த முடியும் மற்றும் தொடர்ந்து மேம்படுத்த முடியும்.

இந்தத் திட்டத்தின் முடிவுகளை முன்வைத்து IFC க்கான GEAR திட்டத்தின் தலைவரான திருமதி. Raquael Scarapi ஆடைத் துறையில் தொழில்முறை முன்னேற்றத்தில் திட்ட முடிவுகள் ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க தாக்கத்தை வலியுறுத்தினார். வியட்நாம் மற்றும் பங்களாதேஷில் காணப்பட்ட வெற்றி விகிதத்தை விஞ்சி இலங்கையில் செயற்பாட்டுத் திட்டத்தின் விதிவிலக்கான செயல்திறன் மற்றும் மாற்றத்தக்க முடிவுகளை அவர் எடுத்துரைத்தார். பங்கேற்பாளர்களில் 70% க்கும் அதிகமானோர் இயந்திர இயக்குனர்களின் நிலையிலிருந்து மேற்பார்வை மற்றும் நிர்வாக நிலை பதவிகளுக்கு பதவி உயர்வு பெற முடிந்தது என்று அவர் கூறுகிறார்.

இந்த நிகழ்வின்போது இடம்பெற்ற கலந்துரையாடலில் அந்தந்த நிறுவனங்களின் பயிற்சியாளர்கள் மற்றும் தொழிற்சாலை முகாமையாளர்கள் GEAR திட்டத்தின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இந்த முன்முயற்சியானது கற்றலுக்கான ஒரு முக்கிய வழி என்றும், தலைமைப் பதவிகளுக்கான பெண்களின் பயணத்தில் உள்ள தடைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிவதில் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தப்பட்டது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். Better Work (BW) திட்டத்தின் படி ஒக்டோபர் 2023 க்கு முன் மற்றொரு தொகுதி பயிற்சியாளர்களை அறிவாற்றலுடன் மேம்படுத்துவதற்கு அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

# R 2023 விருது விழாவில் இரண்டு தங்க விருதுகளை வென்ற MAS KREEDA

## MAS க்கும் நாட்டிற்கும் இது தனித்துவமான மைல்கல்

அண்மையில் டுபாயில் நடைபெற்ற 2023 RoSPA (Royal Society for the Prevention of Accidents) விருது நிகழ்வில் "சாதனை" பிரிவில் MAS KREEDA இரண்டு தங்க விருதுகளை வென்றது. தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் நிறுவனத்தின் பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பை குறித்து இச்சாதனைகள் வழங்கப்பட்டன. MAS KREEDA Synergy மற்றும் Shadeline உற்பத்தி நிலையங்கள் ஆகியவை இந்தச் சாதனையின் பெருமைக்குரிய உரிமையாளர்களாவர். 67 ஆண்டுகளாக இயங்கும் RoSPA Health and Safety Awards, என்பது ஐக்கிய இராஜ்ஜியத்தின் மிகப்பெரிய தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விருது வழங்கும் திட்டமாகும். இவ்வமைப்பு விபத்து தடுப்பு, சுகாதாரப் பிரச்சினைகள் செயல்திறன், தலைமைத்துவம், கலாசாரம் மற்றும் பணியாளர்களின் பங்கேற்பு போன்ற நடைமுறைகள் உட்பட பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்புகளில் நிறுவனங்களின் செயல்திறன் மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றம் ஆகியவற்றை அடையாளப்படுத்துகிறது.

RoSPA உலகளவில் 50க்கும் அதிக நாடுகளிலிருந்து ஆண்டுதோறும் 2,000 க்கும் மேற்பட்ட உள்ளீடுகளை ஈர்ப்பதுடன், 7 மில்லியனுக்கும் அதிகமான ஊழியர்களைச் சென்றடைகிறது. குழு பலத்தை மேம்படுத்துவதிலும் நிறுவனத்தின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளுக்கான அங்கீகாரத்தை வழங்குகிறது. மேலும், RoSPA விருதுகள், விபத்துகளைத் தடுப்பதற்கான உலகளாவிய அளவுகோலாக இருக்கும் அதே வேளை, ஊழியர்களின் வாழ்க்கையில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பாதுகாப்பிற்கு முன்னுரிமையளிப்பதை நோக்கமாகக் கொண்ட நிறுவனங்களால் மிகவும் மதிக்கப்படுகிறது.

MAS KREEDA இன் நிலைத்தன்மை வணிகப் பிரிவின் பொது முகாமையாளர் எரங்க தில்ஹான் கருத்து தெரிவிக்கையில், "இந்த இரண்டு தங்க விருதுகளையும் ROSPA விடமிருந்து பெறுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த விருதுகள் எங்கள் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் கலாசாரம், அணுகுமுறை மற்றும் அர்ப்பணிப்புக்கு சான்றாகும். சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தரங்களை



வலுப்படுத்துவதில் தூதுவர்களாக இருக்கின்றனர்."

தொழிற்சாலைகளில் முன்மாதிரியான சுகாதாரம், பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் அதன் ஊழியர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கான முயற்சிகளை இந்த விருது பாராட்டுகிறது. மேலும், நிறுவனத்தினால் அதன் ஊழியர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு வழக்கமாக வழங்கும் பயிற்சி, அதன் வசதிகளின் கடுமையான பாதுகாப்புத் தணிக்கை மற்றும் பாதுகாப்பு மீறல்களுக்கு பூஜ்ஜிய சகிப்புத் தன்மை (Zero Tolerance Policy) கொள்கை உள்ளடக்கிய ஒரு விரிவான சுகாதார மற்றும் பாதுகாப்பு நிர்வாக அமைப்பை செயற்படுத்தியுள்ளது. அத்துடன், நிறுவனம் அதன் விநியோகச் சங்கிலியில் புத்தாக்கமான பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தியுள்ளது. விநியோகஸ்தர்களின் செயற்பாட்டைக் கண்காணிக்கவும் மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

MAS KREEDA இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸியான் ஸாஹிர் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த விருது MAS KREEDA விற்கு ஒரு சிறப்பு மைல்கல் மட்டுமல்ல, முழு இலங்கைக்கும் ஒரு சிறப்பு சாதனையாகும். KREEDA உடன் தொடர்புடைய அனைவரின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பிற்கு நாங்கள் எப்போதும் முன்னுரிமை அளித்து வருகிறோம். இந்த விருதுகள் எங்கள் உடல் நலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நிர்வாக அமைப்பின் செயல்திறனை உறுதிப்படுத்துகின்றன. எங்கள் குழுக்களின் நலம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளில் சிறந்து விளங்கும் அதேவேளை, தொழில்துறைக்கு புதிய வரையறைகளை அமைக்கும் என நான் நம்புகிறேன்." - எனத் தெரிவித்தார்.

அனைத்து தொழிற்சாலைகளும் ISO 45001 சான்றிதழ் பெற்றவை மற்றும் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கான சர்வதேச தரத்திற்கு இணங்குகின்றன. நிறுவனம் பொறுப்பான பராமரிப்புத் திட்டத்தின் கீழ் சான்றளிக்கப்பட்டது, நிலையான மற்றும் பொறுப்பான நடைமுறைகளுக்கு அதன் அர்ப்பணிப்பை நிரூபிக்கிறது. MAS KREEDA இன் நிர்வாகம் IOSH Transformational Leadership திட்டத்தை நிறைவு செய்துள்ளது மற்றும் மூன்றாம் நிலை சான்றிதழ் பெற்றுள்ளது. நேர்மறையான மாற்றத்தை உருவாக்கக்கூடிய மற்றும் பாதுகாப்பான நிறுவன கலாசாரத்தை நிறுவக்கூடிய வலுவான தலைமையை உருவாக்க இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# 4 சக்கர ( ) உழவு இயந்திர சந்தையில் தனது ஆதிக்கத்தை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தும் r ts




தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாக உழவு இயந்திர விற்பனையில் Hayleys Agriculture நிறுவனம் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இது நம்பகமான மற்றும் உயர்தர விவசாய இயந்திரங்களைத் தேடும் விவசாயிகளுக்கான வாய்ப்பை ஏற்படுத்தும் அதன் நற்பெயரை மேலும் வலுப்படுத்துகிறது. ஒரு விருப்பமான தெரிவு எனும் அதன் நிலையை உறுதிப்படுத்தியவாறு 4 சக்கர (4WD) உழவு இயந்திர விற்பனையில் 2023 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தனது சந்தை ஆதிக்கத்தைத் Hayleys Agriculture தக்கவைத்துக்கொண்டுள்ளது. அதிக எண்ணிக்கையிலான உழவு இயந்திர விற்பனையுடனும் இச்சந்தையில் 44% எனும் உயர்ந்த விற்பனைப் பங்குடனும் அது இத்தொழில்துறையில் முன்னணி வகிக்கின்றது.

அந்த வகையில், நான்கு சக்கர செலுத்துகை (4WD) உழவு இயந்திரப் பிரிவிலும் நிறுவனத்தின் வெற்றி விரிவடைகின்றது. அதற்கமைய பிரபல வர்த்தக நாமங்களான Kubota மற்றும் E-Kubota ஆகியவற்றின் விற்பனையானது ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் குறிப்பிடத்தக்க வகையிலான 69%எனும் விற்பனையை நிறுவனம் இத்தொழில்துறையில் கைப்பற்றியுள்ளது.

உழவு இயந்திரங்கள் மற்றும் விவசாய இயந்திரங்களின் நம்பகமான விநியோகஸ்தர் எனும் வகையில் Hayleys Agriculture ஆனது விவசாயிகளின் அசைக்க முடியாத விருப்பமான தெரிவு என்பதை இந்த சிறந்த புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஜப்பானின் Kubota Corporation உடனான பெறுமதிமிக்க கூட்டாண்மை மற்றும் விற்பனைக்குப் பின்னரான நம்பகமான சேவைகள் ஆகியவற்றின் ஆதரவுடன் உயர்தர தயாரிப்புகளை வழங்குவது தொடர்பான நிறுவனத்தின் நற்பெயரானது, அவர்களது நிலையை வலுப்படுத்தியுள்ளது. அது மாத்திரமன்றி, நிலைபேறான விவசாய நடைமுறைகளுக்கான அவர்களது அர்ப்பணிப்பு, விவசாயிகளிடையே அவர்களின் ஈர்ப்பை அதிகரிக்கச் செய்துள்ளது.

Kubota Corporation உடனான நிறுவனத்தின் ஒத்துழைப்பின் மூலம் விவசாயிகளுக்கு அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் உயர் வகை இயந்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை Hayleys Agriculture ஏற்படுத்துகிறது. இது உள்ளூர் விவசாயிகளுக்கு உற்பத்தித்திறன் மற்றும் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும் நாட்டில் சாதகமான பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தவும் உதவுகிறது.

சந்தையில் முன்னணியில் உள்ள ஒரு நிறுவனம் எனும் வகையில் தொடர்ச்சியான புத்தாக்க கண்டுபிடிப்புகள் மூலம் இலங்கை விவசாயத் துறையை நவீனமயமாக்குவதில் Hayleys Agriculture Holdings Limited அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. மேம்பட்ட தொழில்நுட்பங்களை அறிமுகப் படுத்துவதன் மூலம் உள்ளூர் விவசாயத் துறையில் உற்பத்தித்திறன் மற்றும் செயற்றிறனை மேம்படுத்துவதே நிறுவனத்தின் குறிக்கோளாக உள்ளது. வலுவான சந்தை இருப்பு மற்றும் விவசாயத்துறையை முன்னேற்றுவதற்கான அர்ப்பணிப்புடன் இலங்கையின் விவசாயத் துறையை வளமான மற்றும் நிலைபேறான எதிர்காலத்தை நோக்கிக் கொண்டுசெல்வதில் Hayleys Agriculture முக்கிய பங்கு வகிக்கிறது.

## ஸ்ரீமன் நாராயணன் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக பெருவிழா



காரைதீவு செய்தியாளர்

காரைதீவு அருள்மிகு ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீமன் நாராயணன் தேவஸ்தான புனராவர்த்தன நவகுண்ட மஹா அஷ்டபந்தன கும்பாபிஷேக குடமுழுக்குப் பெருவிழா 09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகப் பெருவிழா கிரியைகள் இன்று 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 06 மணிமுதல் கர்மாரம்பம், விநாயகர் வழிபாடு, கங்காதேவி பூஜை, ஆதித்யாக்கினி சங்கிரணம், நூதன மூர்த்திகள் பூஜைகள் இடம்பெற்று 8ஆம் திகதி சனிக்கிழமை காலை புண்ணியாக வாசனம், யாக பூஜை, விசேட திரவிய ஹோமம், சகஸ்ரநாம ஹோம கிரியைகள் ஆரம்பமாகி 07.00 மணிமுதல் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு பிற்பகல் 5.00 மணிவரை இடம்பெறும்.

ஞாயிற்றுக்கிழமை 09ஆம் திகதி காலை 8.50 முதல் 10.28 வரையிலான சுபவேளையில் மஹா கும்பாபிஷேக பூஜை நிகழ்வுகள் இடம்பெறும்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வட்டவானில் இறால் வளர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்

## ஐந்து மீனவ அமைப்புகள் இணைந்து பேரணி





கிரான் செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்ட கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருமலை வீதி வட்டவானில் பாரியளவிலான இறால் வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்படுவதனால் அப்பகுதி நன்னீர் மீன்பிடிபோரும் அன்றாடம் ஜீவனோபாயத் தொழிலை மேற்கொள்வோரும் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து அதனைத் தடுத்து நிறுத்துமாறு கோரி ஆர்ப்பாட்டமும் கண்டனப் பேரணியும் வியாழக்கிழமை(06) இடம்பெற்றன.

பிரதேசத்தில் உள்ள மாங்கேணி, காயன்கேணி, வட்டவான் மற்றும் ஆலங்குளம், இறாலோடை போன்ற மீனவ அமைப்புகள் இணைந்து இந்த ஆர்ப்பாட்ட பேரணியை முன்னெடுத்திருந்தன.

காயன்கேணி பழைய பாலத்திலிருந்து ஆரம்பமாகிய குறித்த பேரணியானது திருமலை வீதி ஊடாகச் சென்று வட்டவான் இறால் பண்ணைக்குச் சென்று பண்ணை முன் பதாதைகளை ஏந்தியவாறு "அசுத்தப்படுத்தாதே வாவி நீரை அசுத்தப்படுத்தாதே, அழிக்காதே அழிக்காதே மீன் வளத்தை அழிக்காதே. சுத்தமான காற்றை சுவாசிக்க விடு, மீனவரின் வாழ்வாதாரத்தை அழிக்காதே' போன்ற கோஷங்களை எழுப்பினர்.

வட்டவான் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இறால் பண்ணையினால் குறித்த வாவி அசுத்தமடைந்து வருவதாகத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்த இறால் பண்ணையில் இருந்து திறந்து விடப்படும் நீரினால் ஆற்றில் மீன்கள் இறந்து காணப்படுவதுடன் இதனால் மீன் மற்றும் இறால் வளங்கள் அழிவதனால் தாங்கள் பொருளாதார ரீதியில் பின்நோக்கிச் செல்வதாகவும் குறிப்பிட்டனர்.

மேலும், தாங்கள் யாரிடம் சென்று முறையிடுவது என்று தெரியாமல் உள்ளதாகவும் இதனை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் கவனத்தில் எடுக்க வேண்டுமெனவும் இப்பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இவ்விடயம் பற்றி கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வேளாண்மை நிலம் நீரின்மையால் பாதிப்பு

### விவசாயிகள் கவலை



மூதூர் செய்தியாளர்

திருகோணமலை - சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தில்லக்சூழி, புளியங்குளம் போன்ற வேளாண்மை வெளிகளில் செய்கையண்ணப்பட்ட சுமார் 250 ஏக்கர் வேளாண்மை நீரின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் விவசாயி ஒருவர் கருத்து தெரிவிக்கையில், RB வாய்க்காலை நம்பித்தான் வேளாண்மை செய்தோம். தற்போது வாய்க்காலில் தண்ணீர் இல்லாமையால் வேளாண்மை கருகிப்போயுள்ளன. அவை நீர் இல்லாவிட்டால் நாங்கள் எங்கே போவது? கடந்த பெரும்போகத்தின்போது மஞ்சள் நிற நோய்த்தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு நஷ்டமடைந்தோம். இம்முறை தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகின்றோம்.

கடன்பட்டு வேளாண்மை செய்தும் எமது செய்கையை கைவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். நாங்கள் கஷ்டப்பட்ட ஏழைகள். வேளாண்மைச் செய்கை மாத்திரம்தான் எங்களது தொழில். வேறு தொழில் எங்களுக்கு இல்லை. இப்படி இருந்தும் சிறுபோக வேளாண்மை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட எமக்கு நீரை விரைவாக வழங்குவதற்கும் நஷ்ட ஈட்டைத் தருவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென சேருநுவர - தில்லக்சூழி, புளியங்குளம் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் படத்தை தனிநபர் பயன்படுத்தத் தடை

பொலிவேரியன் செய்தியாளர்

சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் முகப்புத் தோற்றத்தை (பள்ளிவாசலின் படம்) எக்காரணம் கொண்டும் தனிநபர் யாரும் பயன்படுத்துவது பள்ளிவாசல் நிர்வாகத்தினால் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் வெளியிடப் பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, அண்மைக்காலத்தில் பள்ளிவாசலின் படம் சட்டத்துக்கு முரணான முறையில் தனிநபர் ஒருவரால் பேஸ்புக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் படத்தை பெரிய பள்ளிவாசலின் அனுமதி இல்லாமல் தனிநபர் யாரும் பயன்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு மீறி பயன்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கஞ்சாவுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

கோணாவத்தை செய்தியாளர்

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோவில் வீதியில் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருக்கோவில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து குறித்த பிரதேசத்துக்குச் சென்ற பொலிஸார் சந்தேக நபரிடமிருந்து 400 மில்லிகிராம் கஞ்சாவை வியாழக்கிழமை (04) கைப்பற்றியுள்ளனர்.

கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது சந்தேகநபரை 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு தொடர்பில் அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் ஆராய்வு





களுதாவளை செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்ட சிறுவர்களது உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கான சுபீட்சமான எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுப்பதில் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழுவின் இரண்டாம் காலாண்டுக்கான கூட்டத்தின்போது ஆராயப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா வழிகாட்டுதலின் கீழ் உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வியாழக்கிழமை(06) நடைபெற்ற கூட்டத்தின்போது பிரதேச மட்டத்தில் சிறுவர்களின் கல்வி, சுகாதாரம், போஷாக்கு மற்றும் பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் ஊழியம், போதைவஸ்து, வீதியோர யாசகம் மற்றும் வியாபாரம் உட்பட சிறுவர் அச்சுறுத்தல் தொடர்பான பல விடயங்கள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டன.

இதுவரை பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவில் ஆராயப்பட்டு தீர்வு காணப்படாத விடயங்களும் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவில் முன்வைக்கப்பட்டு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகள் தொடர்பிலும் இதன்போது கருத்துகள் பரிமாறப்பட்டன.

இந்நிகழ்வின் 14 பிரதேச செயலாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணியக மனநல வைத்திய நிபுணர் டாக்டர் டான், வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், சிறுவர் மகளிர் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகள், மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள், உளவியல் சமூக அலுவலர் மற்றும் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி அலுவலர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் உட்பட துறைசார் திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## மாளிகைக்காடு அந்-நூர் ஜும்ஆப் பள்ளிவாசல்

# 1000ஆவது குத்பா பேருரையும் ஜும்ஆ தொழுகையும்



மாளிகைக்காடு அ. அஸ்வர்

மாளிகைக்காடு அந்-நூர் ஜும்ஆப் பள்ளிவாசலின் 1000ஆவது குத்பா பேருரையும் ஜும்ஆ தொழுகையும் இன்று வெள்ளிக்கிழமை(07) இடம்பெறுவதையிட்டு விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 2004 ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி முதல் ஜும்ஆ பள்ளிவாசலாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இப்பள்ளிவாசலின் முதலாவது குத்பா பேருரையும் ஜும்ஆ தொழுகையும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் முன்னாள் அதியுயர்பீட உறுப்பினரும் அகில இலங்கை பிறைக்குழுச் செயலாளரும் கொழும்பு ஜம்இய்யத்துல் உலமாவின் செயலாளருமான மர்ஹூம் மௌலவி ஏ.எம்.அப்துல் அஸீஸினால் (மிஸ்பாஹி) அங்குரார்ப்பணம் செய்துவைக் கப்பட்டது.

எல்லைப்புறத்தில் அமையப்பெற்றுள்ள இப்பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுகை ஒன்றை தமது தேசத்தவர்களுக்கென தனித்துவமாக நடைமுறைப்படுத்த முடியாமல், அயல் பிரதேசமொன்றையே நீண்டகாலமாக நம்பியிருந்த நிலையில் இப்பள்ளிவாசலின் ஸ்தாபகர்களான மீனவ சமூகத்தினதும் பள்ளிவாசல் நிர்வாகத்தினதும் அளப்பிரிய தியாகங்களுக்கும் போராட்டங்களுக்கும் மத்தியில் ஜும்ஆத் தொழுகையை ஆரம்பித்து இன்று அதன் 1000ஆவது நிகழ்வை நடத்துகிறது என்பது ஓர் இமாலயச் சாதனை எனலாம்.

இறைவன் அருளிய கடற்செல்வத்திலிருந்து கிடைக்கும் நன்மைகளைக்கொண்டு உருவாக்கப்பட்ட அன்றைய அத்தமுனைப்பள்ளி இன்று ஜும்ஆப் பள்ளிவாசல் என்ற அந்தஸ்துக்கு உயர்ந்திருப்பதுடன் 1000ஆவது குத்பா பிரசங்க நிகழ்வில் தடம் பதித்திருக்கிறது.

இந்நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு தற்போது 1000ஆம் வாரத்தை எட்டியுள்ள நிலையில் அன்றுமுதல் இன்றுவரை இப்பள்ளிவாசலின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் அயராது ஒத்துழைப்பு வழங்கிவரும் மீனவர் சமூகம் உள்ளிட்ட பொதுமக்களின் முயற்சிகளின் காரணமாக இன்றைய நிகழ்வை ஏற்பாடு செய்திருப்பதாகவும் இன்றைய 1000ஆவது குத்பா பேருரையும் ஜும்ஆ தொழுகையும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் பத்வா குழு உறுப்பினரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான அஷ்-ஷெய்க் எம்.ஏ.எம்.அன்பாஸ் முப்தியினால்(ஹாஸிமி) நிகழ்த்தப்படவிருப்பதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## போடியார் புலம்பல்!



**தமிழ் நாட்டு முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அம்மாச்சிட நூற்றாண்டு விழாவ கிழக்குமாகாணத்தில நடத்தப்போறதாக முந்தநாள் ஆளுநர் பொடியன் செந்தில் இந்தியா ரிவில சொல்லியிருக்காரு எலுவா?.. அந்த கருணாநிதி இலங்கையில தமிழ்மக்கள் கொல செய்யப்படக்குல வாய பொத்தித்து படுத்த மனிசன் முள்ளிவாய்க்கால் அழிவில இவருக்கும் பங்கு இருந்தது. அப்படியான மனிசனுக்கு இஞ்ச என்ன மொசத்தக்கொண்டு நூறாண்டு விழாவும் சுத்தரிக்காயும் நடத்திற கிழக்கு மாகாணத்தில செய்யக்கூடிய பல காரியங்கள் இருக்குடாம்பி.... சும்மா உட்டுப்போட்டு வேற வேலய பாரு. என்ன நான் சொல்லுற எலுவா.?**

# இஸ்லாம் கூறும் விடயங்களை ஹக்கீம் எம்.பி. ஏற்க வேண்டும்

## ஐக்கிய காங்கிரஸ்



மாளிகைக்காடு செய்தியாளர்

இஸ்லாம் அனுமதிக்காத பெண் காதி விடயத்தில் ரஊப் ஹக்கீம் எம்.பி. தனது பிடிவாதத்தை மாற்றி ஏனைய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ முன்வைத்த திருத்தத்துக்கு மாற்றமான திருத்தத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

இது பற்றி ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்ததாவது:- முஸ்லிம் திருமணச் சட்டத்தில் எத்தகைய திருத்தமும் கூடாது என்பதே எமது கட்சியின் முடிவாகும். ஆனாலும் அண்மையில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவால் முஸ்லிம் திருமணச் சட்டத்தில் உள்ள 'நிகாஹ்' என்ற வசனம் மற்றும் 'முஸ்லிம்' என்ற சொற்பதம் போன்றவற்றை நீக்கி பெண் காதி, பெண் பதிவாளர் போன்ற பல தான்தோன்றித்தனமான திருத்தங்களை முன்வைத்து இதற்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுக்காக முன்வைத்திருந்தார்.

இதனை ஏற்காத முஸ்லிம் எம்.பிக்கள் ஜம்இய்யத்துல் உலமாவுடன் இணைந்து வேறு திருத்தங்கள் கொண்ட புதிய திருத்த பொதியை முன்வைத்துள்ளதாகவும் அதை பதினேழு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டதாகவும் அதில் பெண் காதி நீக்கப் பட்டிருப்பதால் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவர் ரஊப் ஹக்கீம் மட்டும் அதை ஏற்காது பெண் காதி வேண்டும் என தெரிவிப்பதாகவும் அறிய முடிகின்றது.

இந்தப் பொதியின் முழு அம்சமும் எமது கட்சிக்கு இன்னமும் கிடைக்கவில்லையாயினும், இது பற்றிய ஊர்ஜிதமான தகவல்கள் கிடைத்துள்ளன. பெண் காதிக்கு இஸ்லாத்தில் இடமில்லை என்பது இஸ்லாத்தின் ஆரம்ப கால உலமாக்களின் ஏகோபித்த முடிவாகும். முஸ்லிம் என்ற பெயர் கொண்ட கட்சித்தலைவரான ரஊப் ஹக்கீம், முஸ்லிம் திருமணச் சட்டத்தில் எந்தத் திருத்தமும் வேண்டாம் எனக் கூறியிருந்தால் அவரை நாம் மிகவும் வரவேற்றிருப்போம்.

மாறாக, இஸ்லாம் ஏற்காத பெண் காதி விடயத்தில் முஸ்லிம்களின் அதிக வாக்குகளைக்கொண்ட ரஊப் ஹக்கீம் அடம் பிடிப்பது இஸ்லாத்துக்கும் அவரது கட்சிக்கு வாக்களித்த இலங்கை முஸ்லிம்களுக்கும் அவமானத்தை ஏற்படுத்துவதாகும்.

ஆகவே, ரஊப் ஹக்கீம் பெண்காதி விடயத்தில் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதை அவரிடம் கேட்டுக்கொள்கிறோம் - என்று தெரிவித்துள்ளார்.

# உலக செய்திகள்

## கைலாசாவின் பிரதமரானார் ரஞ்சிதா




சர்ச்சை நாயகனாக வலம்வரும் சுவாமி நித்தியானந்தா தமது தலைமை சீடரான நடிகை ரஞ்சிதாவை கைலாசாவின் பிரதமராக அங்கீகரித்துள்ளமை வைரலாகியுள்ளது.

நித்தியானந்தா மீது பாலியல், கடத்தல், கற்பழிப்பு என பல வழக்குகள் உள்ளன. பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில், 2019இல் தலைமறைவானார். நித்தியானந்தாவின் தலைமை சீடர்களில் ஒருவராக இருந்தவர் நடிகை ரஞ்சிதா.

இதற்கிடையே கைலாசா என்னும் தீவுக்கு சென்றுவிட்டதாக நித்தியானந்தாவே தெரிவித்து அதனை இந்துக்களுக்கான நாடாக உருவாக்கியுள்ளதாகவும் அவரே தெரிவித்திருந்தார்.

தங்களுக்கென தனியான அரசு, தனிக் கொடி, பாஸ்போர்ட், நாணயம் உள்ளதாகவும், தன்னை அந்நாட்டின் ஜனாதிபதியாகவும் நித்தியானந்தா அறிவித்தார். ஆனால், அந்த நாடு எங்கு இருக்கிறது என்பது இன்னும் இரகசியமாகவே இருக்கிறது. அங்கிருந்து அவ்வப்போது வீடியோ மூலம் சொற்பொழிவும் ஆற்றி, அதனை தனது பிரத்தியேக யுடியூப் சேனலில் பதிவேற்றியும் வந்தார்.

இந்நிலையில், கைலாசாவின் லிங்க்ட் இன் இணையதள பக்கத்தில் ரஞ்சிதாவின் பெயர் 'நித்யானந்த மாயி சுவாமி' என்றும், அவர் கைலாசாவின் பிரதமர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவியது. எங்கிருக்கிறது என்றே தெரியாத ஒரு நாட்டிற்கு தனிக் கொடி, பாஸ்போர்ட், நாணயம் எல்லாம் ஓவராக இருக்கும் நிலையில், அந்த நாட்டிற்கு ஜனாதிபதி, பிரதமர் எல்லாம் அறிவிக்கப்பட்டுவிட்டனர்.



ஐஸ்லாந்தில்....

## 24 மணி நேரத்தில் 2,200 நிலநடுக்கங்கள்

### எரிமலை வெடிப்புக்கான சமிக்ஞையா?

ஐஸ்லாந்து தலைநகர் ரெய்க்யவிக்கில் நேற்று 24 மணி நேரத்தில் 2,200 நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐஸ்லாந்தின் வானிலை ஆய்வு மையம் தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில்,

''ரெய்க்யவிக் பகுதியில் நேற்று கடந்த 24 மணி நேரத்தில் 2,200 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. இந்த நிலநடுக்கங்கள் நாட்டின் தென் பகுதியில் பரவலாக உணரப்பட்டுள்ளன. இந்த நிலநடுக்கங்கள் எரிமலை சீற்றம் விரைவில் ஏற்படக்கூடும் என்பதற்கான சமிக்ஞைகளாகக் கருதப்படுகின்றன. இதில் பல நில நடுக்கங்கள் மிதமான ரிச்டர் அளவில் 4.1 அளவில் பதிவாகியுள்ளன'' -எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் ஐஸ்லாந்துதான் எரிமலைகள் செயற்பாட்டில் உள்ள பகுதியாக உள்ளது. மேலும் ஐஸ்லாந்து வடக்கு அட்லாண்டிக் தீவு, மத்திய அட்லாண்டிக் ரிட்ஜ், ஐ யூரேசிய மற்றும் வட அமெரிக்க டெக்டோனிக் தகடுகளைப் பிரிக்கிறது. இதன் காரணமாக ஐஸ்லாந்தில் ஏற்படும் நிலநடுக்கங்கள் நிச்சயம் அச்சத்தைத் தரக்கூடியவை என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு முன்னர் ஏப்ரல் 2010ஆம் ஆண்டு ஐஸ்லாந்தில் ஹே ஜஃப்ஜல்லாஜோகுல் எரிமலை வெடிப்பு காரணமாக ஒரு இலட்சம் (1,00,000) விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டன. இதனால் ஒரு கோடிக்கும் அதிகமான பயணிகள் சிக்கித் தவித்தனர். 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளிலும் ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்பு ஏற்பட்டது. இந்நிலையில், ரெய்க்யவிக்கில் ஏற்பட்ட நில நடுக்கங்கள் நிச்சயம் கண்காணிக்கப்பட வேண்டியவை என்று வானிலை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## ட்விட்டருக்கு போட்டியாக களமிறங்கும் திரெட்ஸ்

### புதிதாக 50ஆயிரம் பேர் இணைவு



ட்விட்டருக்கு போட்டியாக பேஸ்புக் நிறுவுனர் மார்க் ஜூக்கர்பெர்க்கால் களமிறக்கப்பட்டுள்ள 'திரெட்ஸ்' சமூகவலைத்தளத்தில் நான்கே மணி நேரத்தில் புதிதாக 50 இலட்சம் பேர் இணைந்துள்ளனர்.

சந்தா செலுத்துவோருக்கு மட்டுமே பிரத்தியேக சேவைகள், ட்விட்டர் பதிவுகளைப் பார்க்க உச்ச வரம்பு என எலான் மஸ்க் அடுத்தடுத்து விதித்த கட்டுப்பாடுகள் ட்விட்டர் பயனர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்தச் சூழலில் பேஸ்புக், இன்ஸ்டாகிராம் ஆகியவற்றின் தாய் நிறுவனமான மெட்டா, திரெட்ஸ் என்ற சமூகவலைத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஐபோன் மற்றும் எண்ரொய்ட் போன்களில் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தக்கூடிய திரெட்ஸ் செயலிக்குள் இன்ஸ்டாகிராம் கணக்கை வைத்தே லொகின் செய்யலாம் என்றும், ஒரு பதிவுக்கு 500 எழுத்துகள் வரை பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ட்விட்டரை கொப்பி பேஸ்ட் செய்தே திரெட்ஸ் உருவாக்கப்பட்டுள்ளதாக ஒருவர் கேலி செய்து பதிவிட்ட ட்விட்டிற்கு எலான் மஸ்க் சிரிப்பதைப் போல் எமோஜி பதிவிட்டுள்ளார்.

## திருச்சி முகாமிலிருந்து முருகனை விடுவிக்கக் கோரி நளினி வழக்கு

### மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்கவேண்டும்; உயர் நீதிமன்றம் உத்தரவு

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட முருகனை அகதிகள் முகாமிலிருந்து விடுவிக்கக் கோரிய வழக்கில் மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையிலிருந்த நளினி, முருகன் உள்ளிட்டோரை விடுதலை செய்து உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தீர்ப்பளித்தது. இதில் இலங்கையைச் சேர்ந்த முருகன் திருச்சியிலுள்ள அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டுள்ளார். இதையடுத்து தனது கணவரை அகதிகள் முகாமிலிருந்து விடுவித்து தன்னுடன் சேர்ந்து வாழ அனுமதிக்கக் கோரி மத்திய அரசுக்கு நளினி மனு அனுப்பியிருந்தார். இந்நிலையில், தனது மனுவின் மீது முடிவெடுக்க மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிடக் கோரி



நளினி தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அந்த மனுவில், ''லண்டனில் வசிக்கும் மகளுடன் சேர்ந்து வாழ கணவர் முருகன் விரும்புகிறார். கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) பெறுவது தொடர்பாக அவர் இலங்கை துதரகத்தை தொடர்புகொள்ள வேண்டியுள்ளது. ஆனால், தற்போது அடைக்கப்பட்டுள்ள அகதிகள் முகாமிலுள்ள அவரால் அங்கிருந்து வெளிவர முடியவில்லை.

எனவே, திருவான்மியூரில் வசிக்கும் தன்னுடன் சேர்ந்து வாழ வகை செய்யும் வகையில் முருகனை அகதிகள் முகாமிலிருந்து விடுவிக்க வேண்டும். வழக்குகளில் சிறை வாசம் அனுபவித்த பல வெளிநாட்டவர்களை சில நிபந்தனைகளின் அடிப்படையில் உறவினர்களுடன் தங்க அரசு அனுமதித் துள்ளது. சிலர் வெளிநாடுகளில் தஞ்சம் புகவும் அரசு அனுமதித்துள்ளது'' -என மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதி என்.சேஷசாயி முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, இந்த மனுவுக்கு மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை ஒத்திவைத்தார்.

16ஆவது தெற்காசிய சம்பியன்ஷிப் தொடர்

## பெனால்டியில் குவைத்தை வீழ்த்தி சம்பியனான இந்தியா




குவைத் அணிக்கு எதிரான தெற்காசிய உதைபந்து சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்தியா பெனால்டி ஷூட் அவுட் முறையில் வெற்றி பெற்று 9ஆவது முறையாக சம்பியனானது.

பெங்களூரில் உள்ள கண்டீரவா மைதானத்தில் 16ஆவது தெற்காசிய சம்பியன்ஷிப் தொடர் நடந்தது. இதில் 8 அணிகள் இடம்பெற்று 2 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு விளையாடின. இறுதிப்போட்டியில் இந்தியா - குவைத் அணிகள் மோதின. இதில் இந்தியா 5-4 என்ற கணக்கில் பெனால்டி ஷூட் அவுட் முறையில் வெற்றி பெற்று 9ஆவது முறையாக சாம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றது.

இந்திய அணி இதற்கு முன்னதாக கடந்த 1993, 1997, 1999, 2005, 2009, 2011, 2015, 2021 ஆகிய ஆண்டுகளில் சம்பியனானது. தற்போது 9ஆவது முறையாகவும் சம்பியனாகியுள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

ஐ.சி.சி. உலகக்கிண்ண தகுதிகாண் தொடர்

## மேற்கிந்திய தீவுகளுடன் இன்று பலப்பரீட்சை நடத்தும் இலங்கை

ஏ. அகீல் சிஹாப்

ஒக்டோபர் மாதம் இந்தியாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி உலகக்கிண்ண தொடருக்கு தகுதிகாண் தொடர் மூலம் தகுதிபெற்றுள்ள இலங்கை அணி, இன்று தங்களது இறுதி லீக் ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணியை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் சிம்பாப்வேயின் ஹராரே நகரில் இலங்கை நேரப்படி பகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

இந்த ஆட்டத்தில் இலங்கை அணி தோற்றாலும் எவ்வாறாயினும் இலங்கை அணி இறுதிப்போட்டியிலும் ஞாயிற்றுக்கிழமை விளையாடவுள்ளது. உலகக்கிண்ண தகுதிகாண் தொடரில் சுப்பர் சிக்ஸ் சுற்றில் இலங்கை அணி விளையாடிய அனைத்து ஆட்டங்களிலும் வெற்றிபெற்றுள்ள நிலையிலேயே இன்று மேற்கிந்திய தீவுகளை எதிர்கொள்கிறது.

பலம்பொருந்திய மேற்கிந்திய தீவுகள் அணி முதல் முறையாக உலகக்கிண்ணத்தில் ஆடும் வாய்ப்பை இழந்தது. முதல் இரு உலகக்கிண்ணங்களை வென்ற குறித்த அணியின் வெளியேற்றம் கிரிக்கெட் உலகில் பேசுபொருளாகவும் மாறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கல்குடா அஸ்பக் அக்கடமியின் ஏற்பாட்டில் பந்து பெட்மின்டன் போட்டி







நாஸிக் எம். மஹாரிம்

கல்குடா அஸ்பக் அக்கடமியின் 5 வருட நிறைவைப் பெருமைப்படுத்தும் வகையில் தேசியம் வியக்கும் ஆரோக்கியதுடனான எழுச்சி எனும் தொனிப்பொருளில் தேசிய மட்ட பந்து பெட்மின்டன் போட்டி அண்மையில் ஓட்டமாவடி அமீர் அலி பொது மைதானத்தில் அக்கடமியின் பணிப்பாளர் இர்பானின் தலைமையின்கீழ் நடைபெற்றது.

இப்போட்டியில் நாடளாவிய ரீதியில் இருந்து 16 ஆடவர் அணியினர்களும் 7 மகளிர் அணியினர்களும் கலந்து கொண்டனர். இப்போட்டியில் ஆடவர் பிரிவில் முதலிடத்தை குருநாகல் மகேசன் அணியினரும் மகளிர் பிரிவில் குருநாகல் அணியினரும் வசமாக்கிக் கொண்டனர்.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக பந்து பெட்மின்டன் தேசிய சம்மேளனத் தலைவர் ரியர் அட்மிரல் பண்டார கலந்துகொண்டார். மேலும் பந்து பெட்மின்டன் தேசிய சம்மேளனச் செயலாளர் ஜே.ஏ.எஸ்.ஆர் ஜயசூரிய, ஓய்வுபெற்ற அதிபர் பிர்தௌஸ் மற்றும் வாழைச்சேனை பொலிஸ் அதிகாரி லசந்த பண்டார, ஓட்டமாவடி உதைபந்தாட்ட செயலாளர் ஆ.ரபீட் மற்றும் அக்கடமி உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## மட்டக்களப்பு பாடுமீன் பொழுதுபோக்கு கழகத்தின் உதைபந்தாட்டத் தொடரில் ஏறாவூர் எஸ்.எஸ்.சி. சம்பியன்

கல்லடி, மட்டக்களப்பு நிருபர்கள்



மட்டக்களப்பு பாடுமீன் பொழுதுபோக்கு கழகத்தின் 75 ஆவது ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் பாடுமீன் பொழுதுபோக்கு கழகத்தின் ஏற்பாட்டில் பத்மநாபா ஞாபகார்த்த சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்றது.

32 அணிகளுடன் நொக்கவுட் முறையில் நடத்தப்பட்ட சுற்றுப்போட்டி கடந்த மே மாதம் முதல் நடைபெற்று வந்தது. இறுதிப் போட்டியில் ஏறாவூர் எஸ்.எஸ்.சி. கழக அணியினரும் காஞ்சிரங்குடா ஜெகன் அணியினரும் மோதிக்கொண்டனர். இதன்போது ஏறாவூர் எஸ்.எஸ்.சி. கழக அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

மட்டக்களப்பு பாடுமீன் பொழுது போக்கு கழகத்தின் தலைவர் பா.செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இறுதிப் போட்டி நிகழ்விற்கு பிரதம அதிதியாக டான் தொலைக்காட்சி குழுமத் தலைவர் எஸ்.எஸ்.குகநாதன் கலந்து சிறப்பித்தார்.

இறுதிப் போட்டி நிகழ்வில் பாடுமீன் பொழுதுபோக்குக் கழகத்தின் பிரதிநிதிகள், கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டதுடன் வெற்றிபெற்ற அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களையும், பணப்பரிசில்களையும் வழங்கிவைத்ததுடன் வெற்றிபெற்ற அணி வீரர்களுக்கான பதக்கங்களையும் அணிவித்து கௌரவித்திருந்தனர்.

## பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் கிங்ஸ் இலவன் அணி முதலிடம்

ஏ.பி.எம். அஸ்ஹர், நூருல் ஹூதா

சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியில் கிங்ஸ் இலவன் அணி முதலாமிடத்திற்கு தெரிவுசெய்யப்பட்டு வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சமுர்த்திப் பிரிவின் ஏற்பாட்டில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் கல்முனை ஸாஹிரா



கல்லூரி தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் 3 அணிகளாகப் பிரிக்கப்பட்டு மைதான நிகழ்வுகளும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் இடம் பெற்றன. இதில் கிங்ஸ் இலவன் அணி 58 புள்ளிகளையும், டைடன் அணி 48 புள்ளிகளையும், றோயல் சலன்சஸ் அணி 47 புள்ளிகளையும் பெற்றன.

இவ்விளையாட்டு விழாவில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்ஸான், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர், சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.எம். நஜீம், விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சபூர்தீன் உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7